விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ,ண்டு 2043 தை 16 திங்கட்கிழமை (30.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 042

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஒபாமாவின் தூதுவரின் வருகையால் கலக்கம் அடைந்துள்ள இலங்கை

## இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு




(கொழும்பு), அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் போர்க் குற்ற விவகாரங்களுக் கான விசேட தூதுவரான ஸ்ரீபன் ரப்பின் இலங்கை விஜயத்தால் அரசியல் வட்டாரங் களிடையே பெரும் கலக்கம் ஏற்பட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள் ளன. அவரது விஜயத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் மந்திராலோசனை இடம்பெறுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் போர்க்குற்ற விவகாரங்களுக் கான விசேட தூதுவர் ஸ்ரீபன் ரப் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்ற விவகாரங்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரித்து ஒழுங்கமைத்து வழக்குகளைத் தாக்குதல் செய்வதற்கு பொறுப் பான அதிகாரியாக இவர் பணியாற்றுவதால் ஸ்ரீபன் ரப்பின் விஜயத்தையிட்டு கொழும்பு கலக்கத்தில் இருப்பதாக இராஜதந்திர வட்டா ரங்கள் தெரிவித்தன. இவரை எவ்வாறு கையா ள்வது என்பது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு உபாயம் வகுத்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் அடுத்த மாத இறுதியில் நடைபெறவுள்ள நிலையில் ஸ்ரீபன் ரப் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்வது (20ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கவுக்குள் மீண்டும் முறுகல்! நீதிமன்றத்தை நாடும் மாற்றுக்குழு



பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்காக நடைபெற்ற தேர்தல் நேர்மையாக நடைபெறவில்லை என குற்றம் சாட்டியிருக்கும் அக் கட்சி யின் மறுசீரமைப்பை வலியுறுத்தும் குழுவினர், இது தொடர்பில் நீதிமன் றத்தில் வழக்கு ஒன்றையும் இன்று திங்கட்கிழமை தாக்கல் செய்ய இருக் கின்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர், பிர தித் தலைவர் மற்றும் தேசிய அமைப் பாளர் பதவிகளுக்கான தேர்தல் கடந்த டிசம்பர் மாதம் 19ஆம் திகதி நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினரான மைத்திரி குணரட்ன மறு சீரமைப்பாளர்களின் சார்பாக இந்த வழக்கை தாக்கல் செய்யவுள்ளார்.

பல்வேறு காரணங்களின் அடிப்படை யில் இந்த வழக்கை தான் தாக்கல் செய்ய விருப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் (20ஆம் பக்கம் பார்க்க)

# இரசாயனத்துளி விழும் அதிசயம்

பருத்தித்துறை நாகலிங்கம் வீதியில் அமைந்துள்ள ஒரு வீட்டில் கடந்த பல நாட் களாக இரசாயனம் தொடர்பான தண்ணீர்த் துளி விழுவது தெரிய வந்துள்ளது.

குறிப்பிட்ட இடத்தில் அதிகாலைப் பொழு திலே இரசாயனத்துளி விழுகிறது. அத்துளி மரத்திலே படும்போது மரம் பட்டு விடுவதாக கூறப்படுகிறது. மேசையில் படும்போது பள பளப்பான தன்மை காணப்படுகிறது.

உடலில் படும்பொழுது கடுமையான குளிர் தன்மை உணரப்படுகின்றது.

இது தொடர்பாக வானிலை அவதான நிலை யத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளனது. (எ-11,24)

# கடத்தப்பட்டதாக கூறப்பட்ட சத்தியசீலன் அச்சுவேலியில் மறைந்திருந்தபோது கைது

(கொழும்பு)

இனந்தெரியாத சிலரால் கடத்தப்பட்ட தாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட கொழும்பு மாநகரசபை மற்றும் பல நிறுவன ங்களின் மொழிபெயர்ப்பாளராக கடமை யாற்றி வந்த சத்தியசீலன் பாக்கியராஜ் கடந்த 23 ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்

அச்சுவேலி பிரதேசத்தில் 34 வயதான சத்தியசீலன் பாக்கியராஜ் மறைந்திருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பு மாநகரபை மற்றும் பல நிறுவ னங்களின் மொழிபெயர்ப்பாளராக கடமை யாற்றும் இவர், விடுமுறையை கழிப் பதற்காக திருகோணமலைக்குச் சென்ற போது இனந் தெரியாதோர் சிலரால் வெள்ளைவானில் கடத்தப்பட்டதாக அவரது மனைவி திருகோ ணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் கடந்த ஜனவரி 13-ம் திகதி முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து திருகோணமலை பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் ரவீந்திர வைத்திய லங்கார மற்றும் திருகோணமலை பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜயவர்தன ஆகியோரின் பணிப்புரைக்கமைய குற்றவி யல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தி (20ஆம் பக்கம் பார்க்க)

# சிப்பாய் - போராளி திருமணம் நல்லிணக்கத்துக்கான ஏற்பாடாம்!



ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் 25வது கஜபா படைப் பிரிவில் பணியாற்றி வரும் படைச் சிப்பாய் ஒருவ ருக்கும் விடுதலைப்புலிகளின் முன்னாள் பெண் போராளி ஒரு வருக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கல்கமுவைச் சேர்ந்த படைச் சிப்பாயான 20 வயதுடைய ஈ.எம்.டி.சந்துருவன் மற்றும் விடு தலைப்புலிகளின் முன்னாள் பெண் போராளியான 18 வயதுடைய சந்திரசேகரன் சர்மிளா ஆகிய இருவருக்குமே இவ்வாறு கிளிநொச்சியில் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தினத்தன்று

# 1600 கைதிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினத்தன்று நாட்டிலுள்ள சகல சிறைச்சாலைகளிலுமுள்ள சிறு குற்றங்களைச் செய்து தண்டப்பணம் செலுத்த முடியாதுள்ள ஆயிரத்து 600 கைதிகள் விடுதலை செய் யப்படவுள்ளனர் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கான புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று பண்ணை வீதியிலுள்ள சிறைச்சாலை க்கு சொந்தமான காணியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கட்டிடத்திற்கான அடிக்கலை நாட்டிய பின்பு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த நாட்டில் சிறு குற்றங்களுக்காக நீதிமன் றில் நிறுத்தப்பட்டு தண்டப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டபோது, அந்த தண்டப்பணத் தை செலுத்த முடியாத நிலையில் சிறை வைக்கப் பட்ட வர்களே அதிகளவில் (20ஆம் பக்கம் பார்க்க)

# எட்டுப் புலிச் சந்தேக நபர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்த உத்தரவு

(கொழும்பு)

பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் சந்தேக நபர்களை புனர்வாழ்வுற்கு உட்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தர விட்டுள்ளது.


இவர்களை தீவிரவாதத் தடுப்புப் பிரிவி னர் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படு த்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது இவர்கள் வவுனியா பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றுள்ள போதிலும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடு படவில்லை எனவும் இவ்வறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் இக்கருத்துக்களை பரிசீலி த்த நீதவான் சந்தேக நபர்களை ஒரு வருடம் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பி புனர்வாழ்வு வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார். (எ-11)





வெளிவாரிப்பட்டப் படிப்புக்களை முடித்தவர்களுக்கான பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பட்டப்படிப்புகளை முடித்த மாணவிக்கு பதக்கம் அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# சுயதொழில் கடன்கள் வழங்கப்படவில்லை

## முன்னாள் போராளிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் கடன் உதவிகளுக்கு விண்ணப்பித்து பல மாதங்கள் ஆகியும் இன்னும் கடன் உதவி கிடைக்கவில்லை என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரிடம் முன்னாள் போராளிகள் விரக்தியுடன் தெரிவித்துள்ளனர்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளை யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று அமைச்சர் சந்திரசிறி கஜதீர சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில், புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்து பல மாதங்கள் ஆகியும் இன்னும் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தி கொடுக்கப்படாத நிலையில் தான் நாம் வாழ்ந்து வருகின்றோம்.

சுயதொழில் கடன் உதவிகளைப் பெற்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்கத்துடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தோம்.

இருப்பினும் பல மாதங்களாகியும் அந்தக் கடன் உதவிகள் வழங்கப்படவில்லை மேலும். மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவிகளும் எங்களுக்கு வழங்கப்படவில்லை என தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீர்மைச்சர் சந்திரசிறி கஜதீரவிடம் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து கருத்துரை வழங்கிய அமைச்சர் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியை கடன் உதவியாக பங்கீடு செய்ய நாம் தீர்மானித்துள்ளோம். இது தவிர விசேட திட்டத்தின் கீழ் உதவிகளை வழங்கவுள்ளோம். சுயதொழில் வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி மீண்டும் உங்களை சந்திக்கவுள்ளேன் அப்போது உங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

போரின்போது காயங்களுக்குள்ளான முன்னாள் போராளிகளுக்கு விசேட மருத்துவ சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன. அவ்வாறு காயங்களுக்குள்ளானவர்கள் அரசாங்க அதிபர் ஊடாக விண்ணப்பிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# முன்னாள் போராளிகளின் இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புதிய சிறைச்சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் முன் னாள் போராளிகளின் இசை நிகழ்வு இடம்பெற்றது.



புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீர் அமைப்பு நேற்று இந்த இசை நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

சமாதானத்தின் நண்பர்கள் என அழைக்கப்படும்முன்னாள் போராளிகளால் இந்த இசை நிகழ்வில் சிங்கள மற்றும் தமிழ் மொழிப்பாடல்கள் இசைக்கப்பட்டன.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ச-6)

## மரண அறிவித்தல்

## திருமதி பத்தினிப்பிள்ளை கந்தசாமி



வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது, இந்தியாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி பத்தினிப்பிள்ளை கந்தசாமி (கந்தரட்ணம் மாஸ்ரர்) 29.01.2012 இல் இந்தியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தசாமியின் (கந்தரட்ணம் மாஸ்டர்) அன்பு மனைவியும் நடராசா நாகம்மா தம்பதிகளின் அன்புமகளும் செல்லையா தையல்நாயகி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் புவனேஸ்வரி (அவுஸ்திரேலியா), அமரர் செல்வராசா (அப்பே ஓவசியர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் பிரதேசசபை வட்டுக்கோட்டை), அமரர் சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வரத்தினம், அமரர்களான திலகவதி, தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வேஸ்வரன் (இந்தியா), இரத்தினேஸ்வரன் (கனடா), செல்வேஸ்வரி (இந்தியா), ஞானேஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரன் (கனடா), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மினி (இந்தியா), கௌரி (கனடா), இராசநாயகம் (இந்தியா), றாஜி (லண்டன்), சுபாசினி (கனடா), வானதி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கார்த்திகா, கோபிநாத், லக்ஸ்மி, அன்பழகன், பிரகலாதன், அனிருத், இந்துஜா, சிவஜா, தாகீசன், உமாசங்கர், முகல்ஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

க. செல்வேஸ்வரன்
Maudavan Apartment,
III Floor Aspirin Garden,
1st Street,
Kilapaukkam,
Chennai- 10.
T.P: 0091 4426460694/ 0091 444 2048949.

தகவல்:- கந்தையா ஜெயதாஸ் (பெறாமகன்)
(கந்தமுத்து மோகன்) 021 373 7713
செல்வராசா கஜாநந்தன் (மருமகன்)
021 225 0363.

(C-5741)

# வீடு புகுந்து தாக்கியதில் பெண் உட்பட மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஏழுபேர் கொண்ட குழு இரவு வேளை வீடு புகுந்து தாக்கியதில் பெண் உட்பட மூவர் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் நவாலி அரசடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ப.பாஸ்கரன் (வயது 50) அவரது மனைவி பா.சிறிபிறேமினி (வயது 47) மற்றும் சி.தனேந்திரன் (வயது 33) ஆகியோர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குடும்பத் தகராற்றின் காரணமாக அதேஇடத்தைச் சேர்ந்தவர்களினால் தாக்கப்பட்ட இவர்கள் கொலை செய்யப்படுவார்கள் எனவும் மிரட்டப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

தாக்கப்பட்டவர்களில் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்த ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (எ-4)

# சுகாதார அமைச்சர் சிறிசேன கிளி.வைத்தியசாலைக்கு திடீர் வருகை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன திடீரென சென்று வைத்திய சாலையின் நடவடிக்கைகளை அவதானித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணியவில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு திடீரென சென்ற சுகாதார அமைச்சர் சிறிசேன மூன்றாம் மற்றும் 5ஆம் இலக்க விடுதிகளை பார்வையிட்டார்.

அமைச்சரின் திடீர் விஜயத்தினை அடுத்து வைத்திய சாலையில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது. இலங்கை மருத்துவ சங்கமும், யாழ்.மருத்துவ சங்கமும் இணைந்து நடத்திய பிராந்திய மாநாட்டு நிகழ்வில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வருகைதந்த அமைச்சர் சிறிசேன, திரும்பச் செல்லும் வழியில் கிளிநொச்சி வைத்திய சாலைக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

பணிப்பெண் தேவை
கொழும்பில் உள்ள வீட்டில் தங்கியிருந்து சமையல் வேலை மற்றும் வீட்டு வேலைகள் செய்வதற்கு 35 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை.
தொடர்புகளுக்கு:-
0779401002
(7397)

தேவை
கொழும்பில் வசிக்கும் 80 வயது தாயாரை பராமரிக்கவும் சமையல், வீட்டு வேலைகள் செய்யவும் 35 வயதுக்கு மேற்பட்ட பெண் வீட்டில் தங்கியிருந்து பராமரிக்கத் தேவை.
தொடர்பு:-
0779401002
(7397)

வர்த்தகப் பெருமக்களே
வியாபாரத்தை பதிவு செய்தல்
BUSINESS REGISTRATION
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL Management Services (Pvt) Ltd
No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-9994777/011-7902938/
011-4343339

# இன்று ஒரு தகவல்

## தவளையின் தலைக்கனம்

ஓர் ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவரைத் தேடி அதிகம் பேர் வருவதுண்டு. அவர் கூறும் அறிவுரைகளைக் கேட்பதுண்டு.

ஒரு நாள் அவர் உபதேசம் செய்து கொண்டிருந்தார். நிறைய சீடர்கள் எதிரிலே உட்கார்ந்து அவர் சொல்லும் அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.

இந்தச் சமயத்திலே புதிதாக ஒரு ஆள் வந்தார். அவன் இது வரைக்கும் அங்கே வந்ததில்லை. இன்றுதான் முதல் தடவையாக வந்திருக்கிறான். வந்தவன் மிகவும் மௌனமாக அடக்கமாக உட்கார்ந்து கொண்டு உபதேசத்தை கேட்டுக் கொண்டிருந்தான்.

யாரிடமும் எதுவும் கதைக்கவில்லை. கடைசி வரைக்கும் அமைதியாக இருந்து கேட்டு விட்டு முடிந்தவுடன் எழுந்து போய் விடுவான்.

அதன் பின்னர் தொடர்ந்து வர ஆரம்பித்தான்.

அவனுடைய அடக்கம், பணிவு எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது.

இப்படியும் ஒரு சீடனா என்று எல்லோரும் வியப்படைந்தனர்.

ஒருநாள் அந்தப் பெரியவரும் அவருடைய இன்னொரு சீடரும் வெளியூருக்குப் போனார்கள்.

போகும் வழியிலே ஒரு நதி. அதைக் கடந்து போக வேண்டும். படகில் ஏறி அமர்ந்து அடுத்த கரையில் போய் இறங்கினார்கள்.

அங்கே ஒரு ஆள் உட்கார்ந்திருந்தான். அவன் மிகவும் உல்லாசமாக காற்று வாங்கிக் கொண்டிருந்தான்.

இவர்கள் முதலில் அவனை கவனிக்கவில்லை.

"என்ன... எப்படி இருக்கிறாய்? சௌக்கியமாக இருக்கிறாயா?" என்று பெரியவரைப் பார்த்து கேட்டான்.

அதன் பின்தான் இவர்கள் அவனைப் பார்த்தார்கள்.

இவர்களுக்கு ஆச்சரியம். வழக்கமாக வந்து பணிவாக உட்கார்ந்து உபதேசம் கேட்டு விட்டு போவான். அதே ஆள்தான் அவ்வளவு அடக்கமாக இருந்தவன். இப்போது ஆணவமாக் மரியாதை இல்லாமல் பெரியவரைப் பார்த்து "எப்படியிருக்கிறாய்" என்கிறானே.

கூட வந்த சீடனுக்கு கோபம்.

பெரியர் முகத்தில் இலேசான புன்னகை.

ஒன்றுமே கூறாமல் இவர்கள் வந்தார்கள். சிறிது தூரம் வந்ததும் உடன் வந்த சீடன் கேட்டான்.

"என்ன... இவன் பேசிய தோரணையே சரி இல்லையே!"

இவனுக்கு பணம் கிடைத்துள்ளது. அதனாலேதான் இப்படி பேசுகிறான்.!

பணம் கிடைத்தால் இப்படிப் பேசுவதா!?

"இவன் மட்டும் இல்லை... மனித இயல்பே பணம் வந்தால் மாறிப் போய்விடும். இவன் ஒரு சராசரி மனிதன். என்ன செய்வான் பாவம்!"

தவளையே தடுமாறிப் போன கதை தெரியுமா உனக்கு?

"தெரியாதே?"

சொல்கிறேன் கேள் என்று பெரியவர் கூற ஆரம்பித்தார்.

ஒரு ஊரிலே ஒரு தவளை இருந்தது. அது மற்றைய தவளை மாதிரி இல்லை. இதன் தலை சற்று நிமிர்ந்து இருந்தது.

ஒரு நாள் யானை ஒன்று அந்தத் தவளையைத் தாண்டிப் போனது அவ்வளவுதான் தவளைக்கு கோபம் வந்தது.

உடனே வளையிலிருந்து வெளியே வந்தது.

அந்த யானையை எட்டி உதைப்பதற்காகத் தவளை தன் காலைத் தூக்கியது. அதுமட்டுமல்ல மனதினுள்ளே நினைத்தது " உனக்கு எவ்வளவு துணிச்சல்?" என்னையே தாண்டிப்போவதற்கு.

சீடன் சிரித்தான்

"ஏன் சிரிக்கிறாய்?" என்று பெரியவர் கேட்டார்.

"அந்தத் தவளை நடக்கிற விதத்தைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது"

"அது ஏன் அப்படி நடந்து கொண்டது தெரியுமா?"

"தெரியவில்லை"

"அந்தத் தவளை தன் வளைக்குள்ளே ஒரு ரூபாய் காசு வைத்திருந்ததாம்! அதனாலேதான்!"

சீடன் யோசனை செய்ய ஆரம்பித்தான்

ஒரு ரூபா காசு ஒரு தவளையையே அப்படி கதைக்க வைத்து விட்டதா...

மனிதன் கையில் காசு வந்து விட்டால் அவன் மனம் சும்மா இருக்குமா?

இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கும் பலர் குற்றங்கள் செய்வதற்கு அடிப்படைக் காரணம் பணம்தான். அதற்காகப் பணத்தைக் குறை கூற முடியாது.

அதைக் கையாளத் தெரியாத மனிதன்தான் குற்றவாளி.

மனித இயல்பு மாறக் கூடிய அளவிற்குப் பணத்துக்கு அடிமையாகி விடக்கூடாது. அதுதான் முக்கியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஐயனார் கோயிலின் இராஜ கோபுரத்திற்கு 10 இலட்சம் ரூபா ஒதுக்கினார் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

தீவகம் வேலணைத்துறையூர் ஐயனார் கோயிலின் இராஜ கோபுரத்திற்கு 10 இலட்சம் ரூபா முதற் கட்டமாக வழங்கப்படும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இக்கோபுரத்துக்கான அடிக்கல்லை நேற்று முன்தினம் நாட்டியபின் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்கவே நாமும் எமது மக்களுக்கான சேவைகளை ஆற்றி வருகிறோம் என்பதுடன் புதிதாக அமையப்பெறவுள்ள இராஜகோபுர கட்டட புனரமைப்பிற்காக எமது கட்சி நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை முதற்கட்டமாக வழங்கவுள்ளதாகவும் நீண்டகாலமாக கட்டடப் பணிகள் பூர்த்தியடையாமல் உள்ள துறையூர் கலாசார மண்டபத்தை விரைவில் முழுமையாகப் புதுப்பொலிவுடன் கட்டி முடிப்பதற்கும் விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

தீவகத்தில் மக்கள் நலன் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு புறம்பாக ஆயிரம் கோடி ரூபாவை வடமாகாணத்தின் அபிவிருத்திக்காக அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் இந்நிதியிலிருந்து தீவகத்தின் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அந்தந்தப் பகுதிகளில் குழுக்களை அமைத்து மக்களது தேவைகள் இனங்காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கட்சி நிதியினூடாக தீவகத்தின் அபிவிருத்திக்கு உதவ தாம் தயாராக இருப்பதாகவும் மக்களது அபிவிருத்தியும் மேம்பாடுமே தமது நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

இக்கோவிலின் அபிவிருத்திக்காக 2001 ஆம் ஆண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 4 இலட்சத்துக்கும் அதிகமான நிதியினை வழங்கியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகர குருமூர்த்தி ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

## கட்டடத்திறப்பு விழா

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறை சுருவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள ஊர்காவற்றுறை பிரதேச சபையின் புதிய தலைமைச் செயலக கட்டமானது எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சபைத் தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் சில்வேஸ்திரி அலன்ரீன், முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலர் திருமதி ர.விஜயலட்சுமி, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ச.பாலசுப்பிரமணியம், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ, யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகன், யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா மற்றும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கே.கமலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(அ-2-7)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 90 |
| தக்காளி | 50 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 25-30 | 30 |
| கோவா | 40 | 60 |
| கரட் | 70 | 70 |
| பூசணி | 30-35 | 30 |
| புடோல் | 30 | 40 |
| வாழைக்காய் | 30-40 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-60 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 |
| பாகற்காய் | 100 | 130 |
| வெண்டிக்காய் | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 |
| பயற்றங்காய் | 130 | 120 |
| லீக்ஸ் | 60 | 60 |
| பீற்றூட் | -- | 70 |
| கறிமிளகாய் | 160 | 140 |
| முருங்கைக்காய் | 350 | 350 |
| போஞ்சி | 30 | 40 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 |
| கீரை - 1 பிடி | 5-8 | 20 |
| தேசிக்காய் | 30-40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 |
| வெங்காயப்பூ | 150 | -- |

## இராசி பலன்

*30.01.2012*

*(தை 16, திங்கட்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு*

*சப்தமி முன்னிரவு 8.53 மணிவரை*

*அச்சுவினி பின்னிரவு 3.24 மணிவரை*

*இராகுகாலம் 8.06-9.36 மணிவரை*

*சுபநேரம் 12.36-2.06 மணிவரை*

### மேடம்
ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த காரியமொன்றில் கணிசமான இலாபம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், கனவு பலிதமுண்டு, உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

### இடபம்
பயணத்தால் பலனுண்டு, நண்பர்களால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், தொழில் மாற்றங்கள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

### மிதுனம்
மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றை செய்து காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தொழில் நன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

### கடகம்
தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### சிங்கம்
சிக்கல்கள் விலகி சிறப்புகள் கிடைக்கும் நாள், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், வீட்டை அழகு படுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள், பிரயாணங்களால் நன்மையுண்டு.

### கன்னி
எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்க நேரிடலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் அவசியம், குடும்பத்தில் சிறு வாக்குவாதங்கள் ஏற்படலாம்.

### துலாம்
களஸ்திர சுகமுண்டு, சுற்றத்தார் வருகையுண்டு, எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

### விருச்சிகம்
எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புகழ் கூடும், மனக்குழப்பம் அகலும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

### தனுசு
வியாபார விருத்தியுண்டு, பூமியால் இலாபமுண்டு, வாய்ப்புக்கள் தேடி வரலாம், நெடுநாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், பொதுச் சேவைகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### மகரம்
பெற்றோரின் தேவைகள் நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும், காரிய நன்மையுண்டு.

### கும்பம்
உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டும் நாள், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், குடும்ப பொறுப்புக்கள் கூடும், கௌரவமான நாள், தொழில் நன்மையுண்டு.

### மீனம்
பணவரவு திருப்தி தரும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி நிம்மதியைக் கொடுக்கும்.

வள்ளவன்

# அதிகளவான பயணிகளை பேருந்தில் ஏற்றுவதை தவிர்த்து கொள்ளுங்கள்

## யாழ்.பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

அதிகளவான பயணிகளை பேருந்துகளில் ஏற்றுவதை சாரதிகளும் நடத்துநர்களும் தவிர்த்துக்கொள்வதன்மூலம் விபத்துக்களை கட்டுப்படுத்த முடியுமென யாழ்ப்பாண பொலிஸ்நிலைய தலைமைப்பொறுப்பதிகாரி சமன்சிகேரா தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பேருந்து கம்பனிகளின் இணைய மண்டபத்தில் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள், பொலிஸார் ஆகியோருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று அண் மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அதிகளவான பயணிகளை ஏற்றிக்கொண்டு மிகவும் வேகமாக தனியார் பேருந்துகள் பயணிப்பதை தான் அவதானித்ததாக அவர் குறிப்பிட்டார்.

பேருந்தின் மிதிபலகையில் பல பயணிகள் தொங்கியவாறு பயணிக்கின்றனர். இது உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதொன்றாகும்.

பேருந்துக்களில் உள்ள இருக்கைகளின் அளவிற்குப் போதுமான பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணிக்கவேண்டும். இதுவே பாதுகாப்பானது.

அதிகபணம் ஈட்ட வேண்டும் என்ற கொள்கையோடு பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடாது.

அநேகமான பொதுமக்கள் தனியார் பேருந்து சாரதிகள் மீதும் நடத்துநர்கள் மீதும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதில் மதுபோதையில் பேருந்துகளில் ஏறும் பயணிகளினால் ஏனைய பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுகிறது என்றால் அவர்கள் அதில் பயணிப்பதை தடுத்து நிறுத்துங்கள்.

மேலும் வீதிப் போக்குவரத்துப் பணிகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ்மொழி தெரியாது. அதனால் என்ன குற்றஞ்சாட்டப்படுகிறது என்பது தெரியாமல் உள்ளது என சாரதிகளும் நடத்துநர்களும் தெரிவித்தனர்.

இந்தக் குறைபாடுகள் பொலிஸ் தரப்பினரிடம் உள்ளது. அதை மிகவும் விரைவாக நிவர்த்தி செய்வோம். தமிழ்மொழியில் கதைக்கக்கூடிய பொலிஸார் வீதிப்போக்குவரத்து கடமையில் ஈடுபடுவார்கள். அதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-6)




## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுதுமலை நாவலர் பாலர் பாடசாலை திறப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எச்சாடியில் நாவலர் பாலர் பாடசாலை செயலாளர் கந்தையா ஸ்ரீநந்தகோபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமெரிக்க ஹவாயை சேர்ந்த ஆன்மீக அன்பர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகளும் விசேட விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகநேசன், வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் சி. திருச்செல்வமும் கௌரவ விருந்தினர்களாக எச்சாட்டி வைரவர் ஆலய தர்மகர்த்தா செல்வி. ரோகினி பேராயிரவர், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் க.சிவராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்விற்கான ஆசியுரையினை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் எச்சாட்டி வைரவர்ஆலய க.சபாக்குருக்களும் ஆற்றவுள்ளனர் என பாடசாலை நிர்வாக சபை தெரிவித்துள்ளது. (அ-7)

# சாவ. நீதவான் நீதிமன்றில் 19 பேருக்கு எதிராக வழக்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் கடந்த வாரம் மேற்கொண்ட தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய வகையில் கொள்கலன்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 19 பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் பொலிஸ் மலேரியா தடுப்பு இயக்க உத்தியோகத்தர்கள், சுகாதார தொண்டர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட பரிசோதனையிலேயே மேற்குறித்த 19 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏழு வலயங்களாக பிரிக்கப்பட்டு தினமும் ஒரு வலயம் என்ற ரீதியில் இவ்வார விழிப்புணர்வு செயற்பாடுகளும் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இக்காலப்பகுதியில் 7 ஆயிரத்து 518 வீடுகள் பரிசோதிக்கப்பட்டன. நுளம்பு பெருகக்கூடியவாறு காணிகளில் பற்றைகள் காணப்படும் காணிகளை துப்பரவு செய்வதற்கு காணி உரிமையாளர்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டு 15 நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத காணி உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்பட்ட தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு செயற்பாடுகள் மூலம் தொடர்ந்து காணிகள், இருப்பிடங்கள் கண்காணிக்கப்படவுள்ளதால் காணி உரிமையாளர்களும் குடியிருப்பாளர்களும் தமது காணிகளையும் குடியிருப்புக்களையும் நுளம்பு பெருகா வண்ணம் துப்புரவுசெய்துவைக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

## தாதிமார் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க தாதிமார் சங்கத்தினால் நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் கடமைபுரியும் தாதிய உத்தியோகத்தர்கள் 15 கோரிக்கைகளை முன்வைத்து நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரையுமான பணிப்புறக் கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

இப்பணிப்புறக்கணிப்பினை சகல தாதிய உத்தியோகத்தர்களும் தத்தமது வைத்தியசாலைகளில் மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் அரசாங்க தாதிமார் சங்க செயலாளர் பி.வி. சிவயோகம் கேட்டுள்ளார். (அ)

# கிளாலியிலிருந்து எழுதுமட்டுவாழுக்கு தனியார் பேருந்து சேவை ஆரம்பம்

கிளாலி பகுதி மக்கள் மீள் குடியேறியதையடுத்து பாடசாலை மாணவர்களினதும் மக்களினதும் நலன் கருதி கிளாலியில் இருந்து எழுதுமட்டுவாழ் ஊடாக யாழ்ப்பாணம் வரையான தனியார் சிற்றூர்தி சேவையை நடத்துவதற்கு தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சங்கத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

எழுதுமட்டுவாழ் தெற்கு மற்றும் கிளாலி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்ததையடுத்து 769/1 மார்க்கத்தில் கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் தமது சேவைகளை ஆரம்பித்துள்ளனர்.

காலை 6.30 மணிக்கு கிளாலியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பாடசாலை சேவையையும் காலை 7.30 இற்கும் பிற்பகல் 3.30 இற்கும் பயணிகள் சேவை கிளாலியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் தனியார் சிற்றூர்தி சேவையை ஆரம்பித்துள்ளனர். (அ-3-29)

# சாவகச்சேரி சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவில் 416 மலசலகூடங்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது

(சாவகச்சேரி)


சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள 416 வீடுகளில் மலசலகூட குழிகளில் வெடிப்பு ஏற்பட்டு நுளம்பு பெருகக்கூடிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


மேற்படி வைத்திய அதிகாரி பணிமனையின் உத்தியோகத்தர்கள் கடந்த வாரம் வீடு வீடாகச் சென்று மேற்கொண்ட தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரப் பரிசோதனையின் போதே மேற்படி காரணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


இவ்வாறான வெடிப்புக்களில் கியூபெக் ரக நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் வெடிப்பு ஏற்பட்ட இடங்களை சீமெந்து கொண்டு மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேற்குறித்த 416 வீட்டு குடியிருப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மலசலகூடகுழிகளில் வெடிப்பு மற்றும் குழியில் பொருத்தப்பட்டுள்ள குழாயில் நுளம்பு உட்புகாத வகையில் வலை பொருத்தப்படாமை, மலசல கூடக்குழிக்கு மூடி பொருத்தப்படும் போது உரிய முறையில் சீமெந்து பூசப்படாமை போன்ற குற்றச்சாட்டுகள் இனங்காணப்பட்டன.

இவற்றை சீர்செய்ய தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)









கோண்டாவில் இந்து மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் எஸ்.சண்முககுமார் உரையாற்றுவதனையும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். தயாளன் வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்கு வெற்றிக்கேடயத்தை வழங்குவதையும் கலந்துகொண்ட மாணவர்கயையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)


# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அதிசுந்தர நவதள, நவகலச இராஜகோபுர மஹா கும்பாபிஷேக தரிசனம் 29.01.2012







பொதுசன நூலகம்
ஆவணந்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.










அந்தணர்கள் கும்ப பூஜை, நடாத்துவதையும்,
யானை,குதிரை,பசுக்கள்சகிதம்
ஆலய மஹா இராஜகோபுர திருக்கதவு
திறந்துவைக்கப்படுவதையும்
அதனைத்தொடர்ந்து அடியார்கள்
மஹா இராஜகோபுரத்தை தரிசித்து
ஆலயத்தினுள் பிரவேசிப்பதனையும்
படங்களில் காணலாம்.







# தமிழர் பூர்வீக இடங்களில் பௌத்த விகாரைகளா?

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைரெட்ணம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு இனப்பிரச்சினை தீர்வுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துவரும் வேளையில் தமிழ் மக்களின் பூர்வீக பகுதியில் விகாரை அமைக்கும் பணிகள் மேற்கொள்வதானது தமிழ் மக்கள் மத்தியில் சந்தேக நிலையை தோற்றுவித்துள்ளது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கச்சக்கொடி சுவாமிமலை கிராம சேவையாளர் பிரிவில் உள்ள புராதன காலத்து அடையாளங்கள் உள்ள பகுதியிலும் மக்கள் இல்லாத பகுதியிலும் இராணுவம், பொலிஸார் உதவியுடன் சிங்கள பொதுமக்கள் ஒரு சில பௌத்த துறவிகளின் உதவியுடன் சிரமதான வேலைகள் மேற்கொள்வதுடன் பௌத்த விகாரை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்னும் சந்தேகம் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக அப்பகுதி வாழ் மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் பூர்வீக பகுதியில் சுமார் 25 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மலையும் மலை சார்ந்த காணியில் இந்த அத்துமீறிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்புராதன காணி ஊடாகவே கெவிழியாமடுக் கிராமத்திற்கு மக்கள் சென்று வருவது வழமையாகும். இப்பகுதியில் தமிழ் மக்கள் இருக்கும் போது வெளி இடங்களில் இருந்து சிங்கள மக்களை கொண்டு வந்து இப்பணியை செய்வதில் உள்நோக்கம் உள்ளதாக மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இப்பகுதியை பொறுத்தவரையில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பகுதியாகும். இப்பகுதியில் 140 சிங்கள குடும்பங்கள் கடந்த நான்கு வருடத்துக்குள் திட்டமிட்டு குடியேற்றப்பட்டவை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பகுதி புராதன காலத்து பல அடையாளங்கள் இருந்ததை இப்பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் நீண்டகாலமாக பாதுகாத்து வந்தனர். யுத்த காலத்தில் கூட எந்த சேதமும் இதற்கு விளைவிக்கப்படவில்லை.

இப்பகுதியில் புராதன அடையாளங்களை அழித்து பௌத்த விகாரை அமைத்து புதியதொரு வரலாற்றை உருவாக்குவதென்பதை தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. இச்செயலானது இரு சமூகத்திற்கும் உள்ள உறவை திட்டமிட்டு சீர்குலைக்கும் முயற்சியாகும்.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (அ-2)

## மெய்வல்லுநர் போட்டி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் என். கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன், கௌரவ விருந்தினராக ஒட்டுசுட்டான் 64 ஆவது படைப்பிரிவு கொமாண்டர் பன்னவல ஆர்.எஸ்.பியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் என். தினேஸ்குமார், முன்னாள் நிறைவேற்று கல்விப் பணிப்பாளர் எஸ்.ராஜேஸ்வரன், ஒட்டுசுட்டான் வலயக்ல்வி அலுவலர் ரி. பங்கய செல்வன், முன்னாள் வலயக்கல்வி அலுவலர் எஸ்.தில்லையம்பலம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் எஸ். அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(அ-7)

# பாடசாலைகளில் பிரதான பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க கோரிக்கை

(மல்லாவி)

வன்னியில் உள்ள பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட துறைசார்ந்த பாடங்களில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இதன் காரணமாக கல்வி நிலை பாதிக்கப்படுகின்றது. பல சந்தர்ப்பங்களில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களே சில பாடசாலைகளில் இடைநிலை, மேல்நிலை மாணவர்களுக்கு கல்வி போதிக்கின்றனர் இந்நிலைமையினை குறிப்பிட்டு வன்னிப் பகுதியில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், பெற்றோர்கள் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றினை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செய லாளர், வடக்கு மாகாண ஆளுநர், முல்லை, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்ட அரச அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களின் கல்வி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த அரச, அரசசார்பற்ற துறைசார்ந்த அமைப்புக்கள் ஆர்வத்துடன் மாணவர்களின் பௌதீகவள தேவைகளையும் மாணவர் கற்றலுக்குரிய உபகரணங்களையும் வழங்கி உதவி வருகின்றனர்.

இவை அனைத்தும் இன்று வீணாகிவிடுமோ என்ற அச்சம் நிலவுகின்றது. இதனால் எதிர்கால சந்ததி கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தி அடைய முடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த ஆண்டுகளில் புதிய நியமனங்கள் மூலமும் இடமாற்றங்கள் மூலமும் வன்னிப் பகுதி பாடசாலைகளுக்கு மேற்குறித்த பாடங்களுக்கு நியமிக்கப்பட்டவர்களில் ஒரு சில ஆசிரியர்களை தவிர ஏனையோர் தமது செல்வாக்கினை பயன்படுத்தி வன்னிப் பாடசாலைகளில் கடமையேற்காதுள்ளனர்.

அனைத்தையும் வன்னிப் போரில் இழந்து விட்டு அகதிகளாக நலன்புரி முகாம்களில் இருந்து மீண்ட மக்களின் சொத்தாக உள்ள பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துறைசார்ந்த அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து ஆசிரியர்களை நியமித்து தர வேண்டுமென அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-3-15)

# புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் வாழ்க்கையை புனரமைக்க முன்வாரீரோ

(மல்லாவி)

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமுதாயத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தொழில்வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

சரணடைந்த 11 ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் அதிகளவான போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஐ.ஓ.எம். அமைப்பினால் 40 வீதமானவர்களுக்கு மட்டுமே சுய தொழில் தொடங்குவதற்கான 75 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் கிடைத்துள்ளன.

மாங்குளம் பிரதேசத்தில் கிட்டத்தட்ட 50 போராளிகள் புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட நிலையில் இரண்டு பேருக்கு மட்டுமே 75 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் கிடைத்துள்ளது.

அத்துடன் அரசாங்கம் வங்கிகள் ஊடாக குறைந்த வட்டி வீதத்தில் நீண்டகாலக் கடனாக இரண்டரை இலட்சம் ரூபா கடன் பெறுவதற்கு பல ஆயிரக்கணக்கானவர்கள் விண்ணப்பித்திருந்த போதும் ஒரு சிலருக்கு மட்டுமே கடன் கிடைத்துள்ளதாகவும் இதற்குரிய விண்ணப்பபடிவங்களை பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

தமக்கு பொது அமைப்புகளில் வர்த்தக நிலையங்களில் பொதுமக்களின் வீடுகளில் வேலைவாய்ப்பு பெறுவதில் கடினமாக உள்ளதாகவும் தமக்கு வேலைவாய்ப்பு வழங்க எவரும் முன்வரவில்லையெனவும் இதனால் தமது குடும்பங்களை காப்பாற்ற முடியாது வாழ்க்கையில் விரக்தி நிலைக்குச் சென்று கொண்டிருப்பதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொது அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் தமக்கு உதவ முன்வர வேண்டுமென கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-15)

# வெள்ள நிவாரணப் பணிக்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர்

(கொழும்பு)


பிலிப்பைன்சில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் நிவாரண பணிகளுக்காக இலங்கை 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

அந்நாட்டின் இலங்கைக்கான தூதுவர் நாவலகே பெனடிக் குரேயினால் இந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிவாரணத் தொகையினை அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் பெற்றுக் கொண்டார்.

பிலிப்பைன்சில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அங்கு அனர்த்த நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் ஆயிரத்திற்கும் அதிகமான பிலிப்பைன்ஸ் பிரஜைகள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)




கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கலைமலர் வெளியீட்டு விழா அண்மையில் கல்சாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா உரையாற்றுவதையும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கணபதிப்பிள்ளை அவர்களிடமிருந்து நூலின் முதற் பிரதியை வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# பன்னெடுங்கால நம்பிக்கையின் பாதுகாப்பினை தேசத்திற்கு அர்ப்பணிக்கும்



## ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் இன்று முதல் அக்கரைப்பற்றில்...




அக்கரைப்பற்றில் வாழும் மக்களின் வாழ்விற்கு முற்றுமுழுதான பாதுகாப்பையும் பராமரிப்பையும் உபசரிப்புடன் வழங்கிடும் நோக்கில், காப்புறுதித்துறையின் முன்னோடியும் பாரிய காப்புறுதி நிறுவனமுமான ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் தனது சேவையை விஸ்தரிப்பதையிட்டு பெருமை கொள்கிறது.

அதற்கமைய **2012 ஜனவரி 30ஆம் திகதியான இன்று பி.ப. 12.30 மணியான சுபவேளையில், இல.143, பிரதான வீதி, அக்கரைப்பற்றில் 2 இல்** தனது புதிய கிளையை திறந்துவைப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றது. உங்கள் வாழ்க்கைக்குப் பக்கபலம் சேர்த்திடும் காப்புறுதியாளருடன் நீங்களும் இணைந்திடும்படி அதன் முகாமைத்துவத்தினரும், ஊழியர்களும் அன்புடன் அழைக்கின்றார்கள்.

A A A RAM RATINGS

AA Fitch Ratings

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

# வடபகுதி ரயில் பாதை அமைக்கும் ஊழியர்கள் தமக்கான சம்பளத்தை வழங்க கோரிக்கை

இந்திய அரசின் இர்க்கோன் நிறுவனம் உலக அளவில் புகையிரதக் கட்டமைப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

இலங்கையில் யுத்தம் நடந்த வடபகுதிக்கான புகையிரதப் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய ஒப்பந்தக் கம்பனி தமக்கு போதுமான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதில்லை என இலங்கையை சேர்ந்த தொழிலாளர்கள் முறையிட்டுள்ளார்கள்.

வசதிகள் எதுவுமின்றி தாங்கள் தொழில் புரிய வேண்டிய நிலையில் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். தொடர்புடைய விடயங்கள் ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரையான 136 கிலோமீற்றர் நீளத்துக்கு புகையிரதப்பாதை அமைக்கும் பணிகள் தற்போது ஓமந்தை பகுதியில் இடம்பெற்று வரு கின்றன.

இதன் ஆரம்பகட்டமாக புகையிரதப் பாதைக்குரிய அடித்தள மண் வீதி அமைக்கும் வேலைகளில் உள்நாட்டு தமிழ், சிங்கள தொழிலாளர்களும் இந்தியர்களும் உட்பட 800 பேர் வரையில் வேலைக்கு அமர்த்தப் பட்டிருக்கின்றார்கள்.

வாகன சாரதிகள் தமக்கு நேர்முகத் தேர்வின் போது உறுதியளிக்கப்பட்ட சம்பளத் தொகை வழங்கப்படவில்லை என்று கூறுகின்ற னர்.

இந்தியத் தொழிலாளர்களின் வசதிகள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு தொழி லாளர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஜனாதிபதி, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் மற்றும் தொழில் ஆணையர் உள்ளிட்டோரிடம் முறையிட்டும் இதுவரை தமக்கு உரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் உறுதி செய்யப்படவில்லை என்றும் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

இதே வேளை தொழிலாளர்களின் இந்தக் குற்றச்சாட்டுக்ளை இலங்கையில் புகையிரத பாதைகளை அமைக்கும் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துகின்ற இர்க்கோன் என்ற இந்திய அரசின் போக்குவரத்து கட்டுமானப் பணிகளுக்கான சர்வதேச நிறுவனம் நிராகரிக்கின்றது. (அ-2)

# செல்லக்கதிர்காமத்தில் ஜனாதிபதி மஹிந்த

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் முற்பகல் செல்லக் கதிர்காமத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போது அங்கு அமைக்கப்பட்ட யாத்திரிகளுக்கான மண்டபத்தையும் விற்பனை கடை தொகுதியையும் அவர் திறந்து வைத்துள்ளார். இதற்கென சுமார் 300 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன.

இதனையே உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 200 மில்லியன் ரூபாய்களும் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# கனடா செல்ல கட்டாரில் தங்கியிருந்த 200 இலங்கை தமிழர்கள் கைதாகினர்

(கொழும்பு)

மேற்கு ஆபிரிக்க நாடான டோகோவில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த குற்றச்சாட்டின் பேரில் பெண்கள் குழந்தைகள் உட்பட 200 இற்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்கள் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாமொன்றில் வைக்கப்பட்டுள்ளதாக செய்தி சேவையொன்று தெரிவித்துள்ளது.

கனடாவுக்கு அனுப்புவதற்காக சட்டவிரோத ஆட்கடத்தல் முகவர்களினால் அழைத்து செல்லப்பட்டு டோகாவிலுள்ள வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்த போதே இவர்கள் அந்தநாட்டு பொலிஸாரினால் சுற்றிவளைப்பில் சிக்கியுள்ளனர்.

தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களினால் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்தவர்கள் புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பின் உதவியுடன் நாடு திரும்பிக் கொண்டிருப்பதாகவும் இதுவரை 9 பேர் நாடு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் தாம் கொழும்பிலிருந்து டோகோ நாட்டை சென்றடைந்ததாக மட்டக்களப்பு செங்கலடிப் பிரதேசத்தை சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொழில் வாய்ப்புக்காக சட்டரீதியாக நேரடியாக கனடாவுக்கு அனுப்பி வைப்பதாக கூறியே குறித்த முகவர் தன்னுடன் மேலும் 4 பேரை டோகோவுக்கு அனுப்பிவைத்ததாக கூறிய அவர் கானா நாடு வழியாக கப்பலில் சட்டவிரோதமாக அனுப்பிவைப்பதே முகவரின் நோக்கம் என்பது அங்கு சென்ற பின்னரே தனக்குத் தெரியவந்ததாகவும் கூறியுள்ளார்.

டோகாவில் 5 வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்த 209 பேரில் 4 முஸ்லிம்களைத் தவிர ஏனையோர் தமிழர்கள் என்றும் அவர்களில் ஓராண்டுக்கு முன்னரே அங்கு சென்றவர்களும் இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த சிலர் முயற்சி

## அரசாங்கம் குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை இலக்குவைத்து சில அமைப்புக்கள் செயற்பட்டு வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.


தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், வங்குரோத்து அடைந்த சில அரசியல் கட்சிகள் உள்ளிட்ட சில தரப்பினர் நேரம் காலம் பார்க்காது நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் முனைப்புக்களில் தீவிரம் காட்டி வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தும் நோக்கில் கொழும்பு மற்றும் வடக்கு, கிழக்கு தற்போது போராட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் யுத்தம் நடைபெற்ற காலத்தில் இந்தத் தரப்பினர் எவ்வித ஆதரவினையும் வழங்கவில்லை என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி,ஜே.வி.பி., தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மற்றும் சில தன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தி வரும் தரப்பினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலிகளுக்கு வழங்கிய ஆதரவு தொடர்பில் குரல் கொடுப்பதில்லை என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)



தமிழ் பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு தமிழ் பௌத்த சங்கத்தின் மண்டபத்தில் வைத்து கற்றல் உபரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களையும் விருந்தினர்களையும் படத்தில் காணலாம். (படம்:- அலுவலக செய்தியாளர்)

# சன்னார் கிராமமக்களை அவர்கள் விரும்பும் இடத்தில் மீளகுடியமர்த்துங்கள்

## வன்னி மாவட்ட எம்.பி. வினோ

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய மன்னார் மாவட்ட சன்னார் கிராமத்தில் தங்கியிருந்த மூன்று குடும்பங்களின் பதிவுப் புத்தகமும் உலர் உணவு முத்திரை என்பன பறிக்கப்பட்டு அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு தெரிவிக்கப்பட்டமை தொடர்பாக குறித்த மூன்று குடும்பங்களும் தன்னிடம் முறைப்பாடு செய்துள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நீதி விசாரணை மேற்கொண்டு குறித்த குடும்பங்களுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுக்குமாறு மன்னார் அரசாங்க அதிபருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இம்மூன்று குடும்பங் களும் இந்தியாவிலிருந்து வந்து கடந்த 19.08.2011 இலிருந்து தற்காலிகமாக நானாட்டான் பிரதேசத்திலுள்ள தோமஸ் கிராமத்தில் வசித்த நிலையில் தமது சுய விருப்பின் பெயரில் கடந்த 10.10.2011 இலிருந்து அங்கிருந்து தமது குடும்ப பதிவினை நீக்கிவிட்டு மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தில் தமது உறவினர் வீட்டில் தங்கியிருக்கின்றனர்.

அங்கு அவர்களுக்கு குடும்பப் பதிவு மேற்கொள்ளப்பட்டு உலர் உணவு முத்திரையும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி அன்று இரவு திடீரென வீடுகளுக்குச் சென்ற மாந்தை மேற்கு பிரதேச செயலாளரும் மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் அக்குடும்பங்களது பதிவுப் புத்தகத்தையும் உலர் உணவு முத்திரையையும் பறித்தெடுத்துவிட்டு அடுத்தநாள் கிராமசேவையாளரிடம் பெற்றுச் செல்லுமாறு கூறியுள்ளனர்.

பதிவுகளும் உதவிகளும் வழங்கப்பட்டு சுமார் மூன்று மாதத்தில் பின் அனைத்தும் நிறுத்தப்பட்டு வெளியேற்றல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் காரணம் அவர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. இதன் மர்மம் புரியாமல் அம்மூன்று குடும் பங்களும் நடுத்தெருவில் நிற்கின்றன.

இரவு நேரத்தில் ஓர் அரசியல் பிரதிநிதியுடன் சென்று ஆவணங்களைப் பறித்துச் செல்வதற்கான அவசியம் பிரதேச செயலாளருக்கு ஏன் ஏற்பட்டது என அறிய விரும்புகிறேன்.

பதிவுசெய்வதற்கும் நிவாரணங்கள் வழங்குவதற்கும் அனுமதி வழங்கிய அதிகாரிகள் மூன்று மாதத்தினுள் தமது முடிவை மாற்றி அமைத்துக் கொண்டதன் காரணத்தை தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

எனவே நீதியான விசாரணை ஒன்றினை மேற்கொண்டு விரும்பிய இடத்தில் குடியேறி வாழவும் இடம்பெயர்ந்தோருக்கான சகல வசதிகளையும் அவர்களுக்கு வழங்கவும் ஒழுங்குகளை செய்து கொடுக்கவும் தங்களை தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். (அ-2)

# சம்பள குளறுபடிகளை தீர்க்க கோரும் வன ஜீவராசிகள் திணைக்கள ஊழியர்கள்

(கொழும்பு)

வனஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை இரண்டாவது நாளாக நேற்றைய தினமும் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

சம்பள குளறுபடிகளுக்கு தீர்வு வழங்கப்படாமை உள்ளிட்ட மேலும் சில கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

தமது கோரிக்கைகளுக்கு உடனடி தீர்வு வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளாதவிடத்து தொழிற்சங்க நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அகில இலங்கை வனஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் பிரபாஷ் கருணாதிலக குறிப்பிட்டுள்ளார்.

வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவிக்கையில்,

எவ்வாறாயினும் வனஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை நியாயப்படுத்த முடியாதென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் தொடர்பிலான அனைத்து விடயங்கள் குறித்தும் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன மேலும் கூறியுள்ளார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 25

## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்



யூக்கோஸ்லாவியாவை நோக்கிஅணிவகுத்துள்ள ஜேர்மனியின் டாங்கி அணியின் பகுதி

1940 ஆம் ஆண்டு இரண்டாம் பாதியிலிருந்து ஹிட்லரின் படைத் தலைமை அட்லாண்டிக்கில் தனது சக்திகளை அதிகப்படுத்தியது: நீர் மூழ்கிக் கப்பல்கள், சாதாரண கப்பல்களைத் தவிர விமானப் படையும் செயற்படத் தொடங்கியது. இது பிரிட்டிஷ் கப்பற் படைக்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்தியது.

மொத்தமாக 1939 செப்ரம்பர் முதல் 1941 ஜூன்வரை அட்லாண்டிக்கிற்கான சமரின்போது நேச நாடுகள் மற்றும் நிடுநிலை நாடுகளைச் சேர்ந்த 7.6 மில்லியன் டன் மொத்த எடையுடைய போக்குவரத்து மற்றும் போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இவற்றில் 53.4 சதவிகிதத்தை ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்களும் 18.7 சதவிகிதத்தை விமானப்படையும் 12 சதவிகிதத்தை சாதாரண கப்பல்களும் மூழ்கடித்தன. இக்காலகட்டத்தில் ஹிட்லர் ஜேர்மனி, 43 நீர்மூழ்கிக்கப்பல்களை இழந்தது.


இவ்வாறாக கிரேட் பிரிட்டனின் முன் அதன் வர்த்தகக் கப்பல்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு கப்பல் போக்குவரத்தே சீர்குலையும் அபாயம் தோன்றியது. எதிரி மட்டும் தனது ஆரம்பத் தாக்குதல் சக்தியை இன்னும் சிறிது காலமாவது அப்படியே வைத்திருந்தால் அது எங்களுக்கு பெரும் கேடான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் என்று இரண்டாம் உலகயுத்தம் பற்றிய அதகாரபூர்வமான பிரிட்டிஷ் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.

போர்க் கப்பல்கள் மற்றும் வர்த்தகக் கப்பல்களின் மாலுமிகளும் பிரிட்டிஷ் உழைப்பாளிகளும் தமது உழைப்பால் நாட்டின் தற்காப்பை பலப்படுத்துவதில் கணிசமான




மே 27,பிரிட்டனால் மூழ்கடிக்கப்பட்ட ஜேர்மனியின் மிகப்பெரிய *பிஸ்மார்க்* போர்க்கப்பல்

பங்காற்றினர். இது தவிர பிரிட்டிஷ் படைத் தலைமை கடற்காவற் படைகளுக்கு குண்டுவீச்சு விமானங்களை வழங்கியது, வர்த்தகக் கப்பல்களை ஆயுதந்தரித்தது, கடற்காவல் படை செல்லும் மார்க்கங்களை முறையாக மாற்றியமைத்தது. ஜேர்மனிய நீர்முழ்கிக் கப்பல்கள் மற்றும் சாதாரண கப்பல்களை அவற்றின் தளங்களிலேயே முற்றுகை இடுவதை அதிகப்படுத்தியது. பிரிட்டிஷ் விமானப் படையின் நடவடிக்கைகளின் பயனாய் பிரெஞ்சுத் துறைமுகமாகிய பிரேஸ்தில் ஜேர்மனிய போர்க்கப்பல்கள் ஷார்ன்கோர்ஸ்டும் கினேய்ஸினாவும் தடுத்து நிறுத்தப்பட்டன. மே 27 ஆம் திகதி மிகப்பெரும் ஜேர்மனி போர்க்கப்பலாகிய பிஸ்மார்க் பிரிட்டிஷ் கப்பற்படையால் மூழ்கடிக்கப்பட்டது. இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டதானது ஜேர்மனியக் கப்பற் படைக்குப் பேரிழப்பாக அமைந்தது. இவையனைத்தும் கடல்களிலும் சமுத்திரங்களிலும் பிரிட்டனை எதிர் நோக்கியிருந்த பேரழிவைத் தவிர்க்க பிரிட்டனுக்கு உதவின.



இத்தாலியால் கைப்பற்றப்பட்ட யூக்கோஸ்லாவியாவின் போர்க்கப்பல்



இத்தாலியால் சேதமாக்கப்பட்ட யூக்கோஸ்லாவியாவின் போர்க்கப்பல்

**4. பால்கன் மீதான தாக்குதல் (1941 ஏப்ரல் 6-29)**

சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்திற்கு தயாராகிவந்த பாசிச ஜேர்மனி பால்கன் நாடுகளுக்கு எதிரான ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது. இவற்றைக் கைப்பற்றியதானது சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்

**வி.அ.மத்சுலேன்கோ**

கான தெற்குப் போர்த்தந்திரத் தாக்குமுனையை ஏற்படுத்தி மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் திட்டமிடப்பட்டிருந்த நடவடிக்கைகளுக்கு வகைசெய்யும் வாய்ப்பை ஹிட்லருக்கு அளித்தது. 1940 ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி பாசிச ஜேர்மனியத் துருப்புக்கள் பல்கேரியாவினுள் நுழைந்தன. ஏப்ரல் 6ஆம் திகதி ஹிட்லர் துருப்புக்கள் யுக்கோஸ்லாவியா மற்றும் கிரீசினுள் நுழையத் தொடங்கின.

யுகோஸ்லாவியா, கிரீசிற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் ஒரே நடவடிக்கையாகத் திட்டமிடப்பட்டன.

**பிரான்ஸின் சரணடைவிற்குப்பின் பிரிட்டன் மீதான தாக்குதல் ஆரம்பம்**

இதன் நிறைவேற்றத்தில் 12-வது மற்றும் 2-வது படைகளும் முதலாவது டாங்கி பிரிவும் (10 டாங்கி டிவிஷன்கள் உட்பட மொத்தமாக 32 டிவிஷன்கள்) 4-வது விமானப்படை மற்றும் 8-வது வான் கோர்பசை சேர்ந்த 1500 க்கும் அதிகமான விமானங்களும் ஈடுபடுத்தப்பட்டன. இத்தாலிய மற்றும் ஹங்கேரியத் துருப்புக்கள் துணைத் திசைகளில் செயற்படுவதற்காக நிறுத்தப்பட்டிருந்தன. பால்கன் நடவடிக்கைக்காக பாசிசக் கூட்டு மொத்தமாக 80 க்கும் கூடுதலான டிவிஷன்கள் சுமார் 2000 டாங்கிகள், 2000 த்துக்கும் கூடுதலான விமானங்கள் ஆகியவற்றை ஒதுக்கியிருந்தது. இதைவிடக் கணிசமான அளவு குறைந்த யுகோஸ்லாவியா, கிரீஸ் சக்திகள்தான் இவற்றிற்கு எதிராக நின்றன. யுக்கோஸ்லாவியத் துருப்புக்களிடம் 28 காலாட்படை, 3 குதிரைப்படை டிவிஷன்களும் 32 தனி ரெஜி மெண்டுகளும் பழைய மாதிரியான 110 டாங்கிகளும் 416 விமானங்களும் இருந்தன. கிரீஸ் துருப்புக்களின் பெரும்பகுதி-15 காலாட்படை டிவிஷன்கள் -இத்தாலி-கிரீஸ் போர்முனையில் அல்பேனியாவில் குவிக்கப்பட்டிருந்தது. பாசிச ஜேர்மனியின் ஆக்கிரமிப்பை முறியடிக்க கிரீஸ் படைத் தலைமையால் 6 டிவிஷன்களை மட்டுமே ஒதுக்க முடிந்தது. கிரீஸில் பிரிட்டிஷ் பயணப்படை கோர்பஸ் ஒன்று இருந்தது. இதில் இரு பிரிட்டிஷ் மோட்டார் பிரிகேட், ஒரு ஆஸ்த்ரேலிய, நியூஸ்லாந்து டிவிசன் (மொத்தமாக 60,ஆயிரம் பேர்கள்) ஆகியனவும் பிரிட்டிஷ் விமானப் படையின் சிறுபிரிவும் (9 ஸ்குவாட்ரன்கள்) இருந்தன. ஆனால், இவை எதுவுமே கிரீஸ் நாட்டவருக்கு எந்த ஒரு முக்கிய உதவியையும் அளிக்கவில்லை. இவ்வாறாக சக்திகளின் சமநிலை பாசிசக் கூட்டிற்கு ஆதாயமானதாக, அதுவும் மிக ஆதாயமானதாக இருந்தது.

யுகோஸ்லாவியா, கீரீஸ் துருப்புக்களைச் சுற்றிவளைக்க, அனுகூலமான நிலையிலிருந்து பாசிச ஜேர்மனியத் துருப்புகளுக்கு பின்வரும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. பலகேரியா, ருமேனியா, ஹங்கேரி, ஆஸ்திரேலியா ஆகியவற்றின் பிரதேசங்களிலிருந்து ஒன்றிணையும் திசைகளில் தாக்குதல் தொடுத்து யுகோஸ்லாவியாவில் நுழைந்து அதைப் பிளவுபடுத்தி அதன் இராணுவத்தை ஒழிப்பது, அதேநேரத்தில் கிரீசுக்கு எதிரான ஆக்கிரமிப்பைத் தொடங்கி சலோனிக்கியைக் கைப்பற்றி லாரிஸ் நகரை நோக்கி முன்னேறுவது. விமானப்படை பெல்கிரேட்டை குண்டு வீச்சுக்கு உள்ளாக்கி விமான நிலையங்கள், இருப்புப்பாதை மையங்களைத் தாக்கி அணிதிரட்டலைக் குலைக்க வேண்டியிருந்தது.

முதல் நாள் படையெடுப்பின் போதே பாசிச ஜேர்மனியத் துருப்புக்கள் விமானப்படையின் ஆதர



ஜேர்மனியால் தாக்கியழிக்கப்பட்ட பெல்கிரேட் நகர்ப்பகுதி

வோடு 30-50 கிலோ மீட்டர்களுக்கு உட்புகுந்தன. அடுத்தநாள் மாசிடோனியாவில் யுகோஸ்லாவியத் துருப்புக்கள் முறியடிக்கப்பட்டன. 3- ஆம் நாள் இறுதியில் பாசிச ஜேர்மனயப் படைப்பிரிவுகள் 200 கிலோ மீட்டர் தூரம் முன்னேறி பெல்கிரேடை அச்சுறுத்தின. ஏப்ரல் 11 ஆம் திகதி இத்தாலி, ஹங்கேரிய துருப்புக்களின் தாக்குதல் தொடங்கியது, இரண்டு நாட்களுக்குப்பின் ஹிட்லரின் துருப்புக்கள் பெல்கிரேட்டில் நுழைந்தன. ஏப்ரல் 15-ஆம் திகதி யுகோஸ்லாவிய இராணுவம் எதிர்ப்பை நிறுத்தியது, நிபந்தனையற்ற சரணாகதி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. (தொடரும்)

# எரிபொருள் இறக்குமதி தொடர்பில் இலங்கைக்கு இராஜதந்திர நெருக்கடி

(கொழும்பு)

எரிபொருள் இறக்குமதி தொடர்பில் இலங்கை இராஜதந்திர பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றது. இந்நிலையில் தொடர்ந்தும் நாட்டின் எரிபொருள் தேவையைப்பூர்த்தி செய்ய தயாராகவே உள்ளதாக ஈரான் இலங்கைக்கு அறிவித்துள்ளது.

ஆறுமாத காலப்பகுதியில் நடைமுறைக்கு வரும் வகையில் ஈரான் மீது அமெரிக்கா நிதிவழங்கல் தடையைக் கொண்டுவரும் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ளார்.

இதேவேளை தொடர்ந்தும் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதாக இந்தியாவுக்கும் ஈரான் அறிவிப்பு விடுத்துள்ளது. எனினும் இந்தியா, அமெரிக்காவின் தடையைக் கருத்திற்கொள்ளாது தெஹ்ரானுக்கு அதன் அதிகாரிகளை அனுப்பி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இந்நிலையில் ஈரான் மீது அமெரிக்கா கொண்டுவரும் நிதிவழங்கல் தடை இலங்கையை பாதிக்கும் விதம் குறித்து தெளிவற்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது.

இதனையடுத்து வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அமெரிக்கத் தூதரகத்துடன் இது குறித்து தெளிவைப் பெற முயன்றுள்ளார்.

எனினும் இந்தவிடயத்தை பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி இலங்கைக்குவரும் அமெரிக்காவின் திறைசேரி உதவிச் செயலாளர் லூசி புரோனிஜுடன் மாத்திரமே கலந்துரையாடமுடியும் என்று அமெரிக்க தூதரக ஊடகப் பணிப்பாளர் கிறிஸ் டீல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஈரான் மீது விதிக்கும் நிதி வழங்கல் தடைக்காரணமாக இலங்கைக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது குறித்து அவரே கருத்துக் கூறக்கூடியவர் என்றும் டீல் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஈரானிடம் இருந்து 80 வீதமான மசகு எண்ணெயை இறக்குமதி செய்கிறது. இதற்காக 4 மாத கடன் சலுகையையும் இலங்கை பெற்றுக்கொள்கிறது. (அ-2)

# வளநகர், திருநகர் பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்க கோரிக்கை

(கொழும்பு)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வளநகர், திருநகர் கிராம மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் அப்பகுதி இரவு வேளையில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

இதனால் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்திற்கும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் வடக்கு மாகாண மின் அத்தியட்சகருக்கும் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் பற்றி தெரியவருவதாவது,

வளநகர் கிராமசேவகர் பிரிவில் 146 குடும்பங்களும் திருநகர் கிராமசேவகர் பிரிவில் 210 குடும்பங்களும் மீள்குடியேறியுள்ளனர்.

இக்கிராமத்திற்கான மின் இணைப்பு வழங்கு குவதற்குரிய வேலைகள்நிறைவடைந்து மூன்று மாதங்கள் கடந்த நிலையில் இதுவரை மின் சாரம் வழங்கப்படவில்லை.

அத்தோடு வளநகர் கிராமத்தில் மு/மல்லாவி மத்திய கல்லூரியில் க.பொ.த உயர்தர பாடங்களை கற்கும் நோக்குடன் பல மாணவர்கள் இக்கிராமத்தில் தங்கியிருந்து கல்வி கற்கின்றனர்.

இம்மாணவர்கள் இரவு நேர கற்றலை மேற்கொள்வதற்கும் கணனி தொடர்பான பயிற்சிகளை பெறுவதற்கும் மின்சாரம் அவசியமாக இருப்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை கருத்திற்கொண்டு பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் மின்சாரம் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-3-15)

# மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வேண்டும்

## கிழக்கு மாகாண சபை தீர்மானம்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற யோசனை கிழக்கு மாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அதன் பிரதி ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால் மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் இல்லாமல் வீடுகளை பராமரிக்கும் பணிகளை மாத்திரமே மேற்கொள்ள முடியும் என்று குறித்த பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான காணிகள், புகையிரதம், பாதுகாப்பு படை வனத்துறை மற்றும் மஹாவலி அதிகார சபை ஆகியவற்றின் கீழ் வருகின்றன.

இந்நிலையில் உள்ள உல்லாச திட்டங்களுக்கான காணிகள் யாவும் கிழக்கு மாகாண சபையின் அனுமதியின்றியே வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை நிறைவேற்றப்பட்ட யோசனையில் பொலிஸ் அதிகாரம் மாகாணத்துக்கு வழங்கப்படுவது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தற்போது சுவிற்சர்லாந்து விஜயத்தை மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் நாடு திரும்பியதும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனுடன் பேசவுள்ளதாகவும் குறித்த விடயங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட விருப்பம் கொண்டுள்ளதாகவும் மாகாணசபை பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 202 கண்ணிவெடிகள் ஒருநாளில் மீட்பு

கண்ணிவெடி அகற்றும் குழுவினரால் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது நிலக்கண்ணி வெடிகள் 202 கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின் இணையத்தளம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. கொக்குதொடுவாய் மற்றும் புல்மோட்டை ஆகிய பிரதேசங்களில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இவை மீட்கப்பட்டுள்ளன. (அ-2)





யாழ். கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது விருந்தினர்களாக கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. நடராசா ,ஓய்வு பெற்ற அதிபர் பொ. அம்பலவாணர், சுத்தானந்தன் , அதிபர் கா. சசிதரன் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# கிளிநொச்சியில் வீடமைப்புக்கடன்

(கிளிநொச்சி)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் இவ்வாண்டும் ஜன செவன வீடமைப்புகடன் திட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் அரச உத்தியோகத்தர்கள் உயர்ந்த பட்சமாக 5 இலட்சம் ரூபாவையும் ஏனையோர் 2 இலட்சம் ரூபாவையும் வீடமைப்புக்கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கான விண்ணப்பங்கள் தற்போது விநியோகிக்கப்படுவதாகவும் கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் மு.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் இக்கடனை பெற்றுக் கொள்ள விரும்புவர்கள் கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ந)

# இந்தியாவில் முதலீடு செய்யவுள்ள பெலவத்த சீனித் தொழிற்சாலை

(கொழும்பு)

இலங்கையில் நீதி கிடைக்காவிட்டால் இந்தியாவில் முதலீட்டை மேற்கொள்ளப் போவதாக பெலவத்த சீனித் தொழிற்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

நட்டமடையும் நிறுவனங்களை பொறுப்பேற்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் பெலவத்த சீனித் தொழிற்சாலையும் பொறுப்பெற்கப்பட்டது.

இந்த நிலையில் மாதம் ஒன்றுக்கு தொழிற்சாலையை பராமரிக்க 86 மில்லியன் ரூபாய்கள் செலவாவதாக பெலவத்த சீனித் தொழிற்சாலையின் தலைவர் தயா மகே தெரிவித்துள்ளார்.

எனவே இந்த நட்டங்களுக்காக அரசாங்கத்திடம் இருந்து 10 பில்லியன் நட்டஈட்டை எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது கிடைக்காத பட்சத்தில் தாம் இந்தியாவில் முதலீட்டை மேற்கொண்டு நட்டத்தை ஈடுசெய்யப்போவதாகவும் தயாமகே குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இலங்கை மீனவர்கள் அறுவரை பிலிப்பைன்ஸ் கப்பல் காப்பாற்றியது

(கொழும்பு)

மீன்பிடி நடவடிக்கைகளுக்காக கடலுக்குச் சென்று காணாமல் போயிருந்த ஆறு மீனவர்கள் பிலிப்பைன்ஸ் கப்பல் ஒன்றினால் காப்பாற்றப்பட்டுள்ளதாக கடற்தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலி மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 6 ஆம் திகதி மீன்பிடி நடவடிக்கைளுக்காக சென்றிருந்த இந்த மீனவர்கள. 11 ஆம் திகதி கடலில் காணாமல் போயுள்ளனர்.

இந்த மீனவர்களை உடனடியாக நாட்டிற்கு அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கடந்தொழில் திணைக்களம் தெரிவிக்கையில்,

சிங்கப்பூர் உயர்ஸ்தானிகராலயம் ஊடாக காப்பாற்றப்பட்ட மீனவர்களை நாட்டிற்கு அழைத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# சர்வதேச நாணய நிதியம் கூடுதலான வட்டியை அறவீடு செய்கின்றது

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் 2.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடனைக் கோரியிருந்தது.

சர்வதேச நாணய நிதியம் கூடுதலான வட்டியை அறவீடு செய்து வருவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கடன் தொகைக்காக இரண்டு வீதம் வட்டி அறவீடு செய்யப்பட்டு வருவதாகவும் இது மிகவும் அதிகமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரையில் சர்வதேச நாணய நிதியம் 2.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

நாட்டின் அவசரத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு இந்தக் கடன்தொகை போதுமானது என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

எனவே மிகுதி கடன் தொகையைப் பெற்றுக் கொள்ளும் திட்டமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எஞ்சியுள்ள கடன் தொகையைப் பெற்றுக் கொண்டால் கூடுதலான வட்டியை ஒட்டுமொத்த கடன் தொகைக்கும் செலுத்த வேண்டியேற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து சர்வதேச நாணயநிதிய அதிகாரிகள் அண்மையில் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

இதன் காரணமாக எஞ்சிய கடன் தொகையை வழங்குவதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது என இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். (அ-2)

# உயிருடன் புதைக்கப்படவிருந்த பெண்

(கொழும்பு)

வியலுவ- கந்தேகெடிய- நாரங்கஸ்தென்ன பிரதேசத்தில் மயக்கத்தில் இருந்த நிலையில் மரணிக்கவில்லை என வைத்தியர்களால் கூறப்பட்ட பெண்ணொருவரை அறியாமையால் சில மணித்தியாலங்களுக்கு முன்னதாக அடக்கம் செய்வதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

மூட நம்பிக்கை அடிப்படையில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு இவ்வாறான முயற்சி இடம்பெற்றுள்ளது.

எனினும் பிரதேச வாசிகளின் தலையீட்டினால் குறித்த பெண்மணியில் உடல் அடக்கம் செய்யப்படவில்லை. பொதுமக்களின் மூடநம்பிக்கைகள் தொடர்பில் இதனைவிட மேலதிகமாக கவனம் செலுத்தப்பட வேண்டும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# தீர்வுத்திட்டத்தை முன்வைக்க தெரிவுக் குழுவுக்கு வாருங்கள்

## அரசாங்கம் அழைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கான பிரதிநிதிகளை நியமிக்காமை தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கு தடையாக அமைந்துள்ளது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு இன்னமும் எதிர்க்கட்சிகள் பிரதிநிதிகளை நியமிக்கவில்லை.

பிரதிநிதிகளை நியமிக்கும் வரையில் தீர்வுத் திட்டங்களை முன்வைக்க முடியாது. ஆளும் எதிர்க்கட்சிகளுக்கான உறுப்பினர் எண்ணிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே நிர்ணயித்துள்ளது என ஆளும் கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட கட்சிகள் இன்னும் தமது பிரதிநிதிகளை நியமிக்கவில்லை. இந்த நிலையில் 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் குறித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கலாம் கிழக்கிற்கு வரவில்லை கிழக்கு மாகாண மக்கள் கவலை

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கிழக்கு பிரதேசங்களுக்கு விஜயம் செய்யாமை தொடர்பில் கிழக்கு மாகாண மக்கள் கவலையடைந்துள்ளதாக முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூர் தெரிவித்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகரகம் அப்துல் கலாமை ஏன் கிழக்கு மாகாணத்துக்கு அழைத்துச் செல்லும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு அப்துல் கலாமை சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட போதும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கப் பெறவில்லை.

இது கிழக்கு மாணவர்கள் மத்தியில் பாரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மதிப்புமிக்க மனிதர் ஒருவரை தாம் சந்திக்க முடியாமல் போனமை கவலையளிப்பதாக கிழக்கு மாகாண மக்கள் குறிப்பிட்டுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் மன்சூர் தெரிவித்துள்ளார். (அ-2)

# 2012.01 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1648-எண்பதாண்டுப் போர் நெதர்லாந்துக்கும் ஸ்பெயினுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் உடன் பாடாகியது.

★ 1649-முதலாம் சார்ள்ஸ் மன்னன் தூக்கிலிடப்பட்டான். அவனது மனைவி ஹென்றியேட்டா மரீயா, பிரான்ஸ் சென்றாள்.

★ 1649- பொதுநலவாய இங்கிலாந்து என்ற குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1649-இளவரசர் சார்ள்ஸ் ஸ்டுவேர்ட் இரண்டாம் சார்ள்ஸ் தன்னை இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் மன்னனாக அறிவித்தான். எனினும் எவரும் அவனை அங்கீகரிக்கவில்லை.

★ 1820- எட்வேர்ட் பிரான்ஸ்ஃ பீல்ட் அண்டார்டிக்காவில் தரையிறங்கினார்.

★ 1835-ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆண்ட்ரூ ஜாக்சன் கொலை முயற்சியில் இருந்து தப்பித்தார்.

★ 1889-அவுஸ்திரேலியாவின் இளவரசர் ருடோல்ஃப் தனது காதலியுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

★ 1930-உலகின் முதலாவது (radio sonde) சோவியத் ஒன்றியத்தில் உருவாக்கப்பட்டது.

★ 1933-அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் ஜனாதிபதியாக (Chancellor) பதவியேற்றார்.

★ 1943- இரண்டாம் உலகப் போர்: உக்ரேனில் லேத்திச்சிவ் என்ற இடத்தில் யூதர்கள் ஆயிரக்கணக்கில் நாசிகளால் கொல்லப்பட்டனர்.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: பால்ட்டிக் கடலில் வில்ஹெ ல்ம் கூஸ்ட்லொஃப் என்ற பயணிகள் கப்பல் சோவியத் நீர்மூழ்கிக் கப்பலினால் தாக்கப்பட்டதில் அதில் பயணம் செய்த 9000 பேர் உயிரிழந்தனர்.

★ 1964-ரேஞ்சர் 6 விண்கலம் ஏவப்பட்டது.

★ 1964-தென் வியட்நாமில் ஜெனரல் நியுவென் கான் (Nguyen Khanh) இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.

★ 1972- வட அயர்லாந்தில் விடுதலைப் போராட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்ட 14 பேர் ஐக்கிய இராச்சிய துணை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1972- பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகியது.

★ 1976- தமிழ்நாட்டில் மு.கருணாநிதியின் தி.மு.க. ஆட்சி கவிழ்க்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டது.

★ 1994-பியோத்தர் லேக்கோ சதுரங்க ஆட்டத்தில் உலகின் முதலாவது வயதில் குறைந்த கிராண்ட் மாஸ்டர் ஆனார்.

★ 2000-கென்யாவின் விமானம் ஒன்று அட்லாண்டிக் கடலில் ஐவரி கோஸ்ட் கரையில் வீழ்ந்ததில் 169 பேர் உயிரிழந்தனர்.

★ 2003-பெல்ஜியம் சமப்பால் திருமணத்தைச் சட்டபூர்வமாக்கியது.

### பிறப்புக்கள்

★ 1882-பிராங்கிளின் ரூஸ்வெல்ட், 32 ஆவது ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் (இ.1945)

★ 1899-மாக்ஸ் தெய்லர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1972)

★ 1910-சி.சுப்பிரமணியம், இந்திய அரசியல்வாதி (இ.2000)

★ 1941-டிக்சேனி, அமெரிக்காவின் 46 ஆவது துணைத் தலைவர்

★ 1949-பீட்டர் ஆகர், நோபல் பரிசு பெற்றவர்

★ 1974-கிரிஸ்டியன் பேல், பிரித்தானிய திரைப்பட நடிகர்

### இறப்புக்கள்

★ 1832-ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன், கடைசிக் கண்டி அரசன்

★ 1891-சார்ள்ஸ் பிராட்லா, ஆங்கில அரசியல் கிளர்ச்சியாளர் (பி.1833)

★ 1928-ஜொஹான்னஸ் ஃபிபிகர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1867)

★ 1948-ஓர்வில் ரைட், ஐக்கிய அமெரிக்காவின் வானூர்தி நிபுணர் (பி.1871)

★ 1969-Georges Pire நோபல் பரிசு பெற்றவர் (பி.1910)

★ 1981-வில்லியம் கோபல்லாவ , இலங்கையின் முதலாவது ஜனாதிபதி (பி.1897)


★ 1991-ஜோன் பார்டீன், நோபல் பரிசு பெற்றவர் (பி.1908)

★ 2007-சிட்னி ஷெல்டன், அமெரிக்க எழுத்தாளர் (பி.1917)

### சிறப்பு நாட்கள்

★ இந்தியா- தியாகிகள் தினம்

★ உலக தொழுநோய் ஒழிப்பு தினம்



★ 1948- அகிம்சாவாதி மகாத்மா காந்தியின் நினைவு தினம்.

# படுகொலையைத் தடுக்காத ஐ.நா. இப்பொழுது அறிக்கை விடுகிறதா?




"இத்ரிஸ் என்கிற எரித்திரியக் கிழவனுக்கு 30 வருடங்களுக்கு முன்னர் கருமையும் திரண்ட தோல்களும் உருக்குலையாத கட்டான உடலும் வாய்த்து இருந்தது. இப்போதுபோன்று இடுங்கிய கண்களும் ஒடுங்கிய கன்னங்களும் கோடுகளாகக் சுருங்கிய தோல்களும் இருக்கவில்லை. அகன்ற நெற்றியும் தலையோட்டினை ஒட்டிச் சுருள் சுருளாயிருந்த தலைமுடியும் அவனுக்கு இருந்தன. எப்போதும் எதையோ சொல்லத் துடிப்பது போலத் தடித்த உதடுகளை அவன் கொண்டு இருந்தான். உறுதியான கரங்க்ள் எத்தியோப்பியப்படைகளிடம் இருந்து பறிக்கப்பட்ட துப்பாக்கிகளைத் தாங்கி இருந்தன. இருண்ட வானத்தில் இரண்டு சூரியன்களைப்போன்ற பிரகாசமான கண்கள் அவனுக்கு இருந்தன. அவற்றில் சதாகாலத்துக்கும் ஒரேயொரு கனவு மீதம் இருந்தது. அது தனி எரித்திரிய விடுதலை தேசம்!"

தனது "ஆறா வ்டு" நாவலின் இறுதி அத்தியாயத்தை இப்படி ஆரம்பிக்கிறார். சயந்தன். 50 ஆண்டுகளாக ஈழத்தில் நடைபெறும் இன ஒடுக்கு முறை, 30 ஆண்டு கால ஆயுத யுத்தம் என நாடுநாடாக நிழல் தேடி ஓடிய ஈழ மக்களின் ஓட்டத்தையும் அதன் கொடும் வலியையும் மக்களின் பார்வையில் இருந்து தனது நாவலில் பதிவு செய்திருக்கும் சயந்தன், அண்மையில் தனது நாவல் வெளியீட்டுக்காக சென்னை வந்திருந்தார். அவருடன் உரையாடியதில் இருந்து...

"இடப்பெயர்வுதான் ஈழ மக்கள் சந்தித்த இரண்டாவது பெரும் யுத்தம். ஒரு பக்கம் இனவாத அரசு, இன்னொரு பக்கம் ஊரை விட்டுத் துரத்தும் இடப்பெயர்வுகள் என இயற்கையோடு மோதிய உயிர் விளையாட்டு அது. அப்படித்தான் எங்களின் இடப்பெயர்வும் நடந்தது. எனக்கு மூன்று வயதாக இருந்த போது, 1983-ல் அப்பா சவுதி அரேபியாவுக்கு இடம்பெயர்ந்தார்.

1995-ல் நடந்த மாபெரும் இடப்பெயர்வில் நானும் அம்மாவும் தங்கையும் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத் தீவில் காடுகள் சூழ்ந்த தேவிபுரம் எனும் கிராமத்துக்கு இடம் பெயர்ந்தோம். மூன்று வருடங்களுக்குப் பிறகு "வெற்றி நிச்சயம்" என்ற பெயரில் வன்னி மீது இலங்கை இராணுவம் பெரும் எடுப்பில் போர் தொடுத்தது. மீண்டும் உயிர் வாழ்க்கை நிச்சயமற்றதாகிய போது, மன்னாரில் இலுப்பைக் கடவை என்னும் இடத்தில் இருந்து படகில் இராமேஸ்வரம் வந்தோம். சற்றே பெரிய மீன்பிடி வள்ளத்தில் சுமார் 40பேர் பயணித்தோம். வெறும் 18 மைல் இடைவெளியில் இந்தியாவும் இலங்கையும் இருப்பதாக சொல்கிறார்கள். ஆனால், அகதிகளுக்கு அந்த தூரம் கொடும் அமைதி சூழ்ந்த பெருந்தூரம். வாழ்தலுக்கான கனவைக் கடலுக்குக் காவு கொடுத்திடாமல் தப்பிப்பிளைப்பதே இயற்கையோடு நாங்கள் நடத்தும் போராட்டம் தான். இரவு 10 மணிக்குப் புறப்பட்ட வள்ளம், மறுநாள் காலை 10மணியளவில் கட்லில் வைத்து இராமேஸ்வரத்தின் வெளிச்சக்கோபுரம் ஒன்றை மெல்லிய ஒளிக் கோடாகக் காட்டியபோதுதான் மீண்டும் நம்பிக்கை துளிர்விட்டது. இராமேஸ்வரத்தில் இருந்து அழைத்துச் சென்று, எங்களை மண்டபம் அகதி முகாமில் தங்கவைத்து இருந்தார்கள்.

அங்கு காலையில் எழுந்ததும் கடலை வெறித்துப்பார்த்தபடி இருந்தோம். பின்னர் மதியம், அந்தியிலும் கடலையே பார்த்தோம். கடலைப் பார்ப்பதைத் தவிர ஒரு குடிமைச் சமூகத்தின் உரிமைகளான கல்வியோ, வேலையோ யாருக்கும் வழங்கப்படவில்லை. பெரும்பாலான குடும்பங்கள், 200 ரூபாயோடும் கொஞ்சம் பருப்பு, அரிசியோடும் வாழ முடியாது இருந்தனர். இவ்வாறான நிலையில், வேறு வழியில்லாமல் நாங்கள் களவாக, எங்கு இருந்து தப்பி வந்தோமோ, மீண்டும் அந்த தேசத்துக்குக் களவாகவே சென்றோம்.


இலங்கையில் இருந்து சுமார் 15 இலட்சம் மக்கள் உலகெங்கும் இடப்பெயர்ந்து இருக்கிறார்கள். சொந்த நாட்டைவிட்டு ஓடவைத்ததில்... குண்டுகள், ஷெல்லடிகள், கடத்தல்கள், கொலைகள், ஆயுதங்களுக்கு பெரும் பங்கு உண்டு. இந்த ஓட்டம் நிம்மதியான பயணமல்ல. கனவை, காதலை, காணியை, பிறந்த வீட்டை, நாட்டை என எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டுத் துரத்தியிருக்கிறது யுத்தம். 80-களின் தொடக்கத்திலேயே மனிதர்களை, இலங்கையை விட்டுத்துரத்தத் தொடங்கிய யுத்தம், இன்னமும் துரத்தியபடியே இருக்கிறது!"

"ஒரு பக்கம் போர் வெடிக்கும் என்கிறார்கள்... இன்னொரு பக்கம் ஈழம் சாத்தியம் இல்லை என்கிறார்கள்... நீங்கள் எந்தப்பக்கம்?"

"நான் எந்தப்பக்கமும் இல்லை. சில காயங்கள், கவலைகள் இருந்தாலும் என் மனைவி-குழந்தையோடு சுவிஸ்ஸில் ஓரளவு நிம்மதியாகவே வாழ்கிறேன். போர் வேண்டும் என நான் சொல்ல விரும்பினால், முதல் துப்பாக்கியை என் குழந்தையின் கைகளிலேயே கொடுக்கும் யோக்கியனாக நான் இருக்கவேண்டும். இன்னொரு பக்கம் எல்லாம் முடிந்துவிட்டது என்கிறார்கள். நான் அப்படி நினைக்கவில்லை. யாருமே விரும்பாத ஓர் இடத்துக்கு வன்னி மக்கள் வந்துவிட்டார்கள். புலிகளை விமர்சித்தவர்கள் கூட வன்னி மக்களின் இந்தத் துயரத்தை விரும்பவில்லை. பெரும் மரணத்துயருள் சிக்கி, போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையிலும் மக்கள் வாழ்வில் எந்த மாற்றமும் தெரியவில்லை. யுத்தம் மக்களை தின்று தீர்த்ததே தவிர, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. யுத்தத்தின்போது இருந்த அதே பதற்றமும் உயிர்கொலை அச்சமுமே அவர்களிடம் எஞ்சியுள்ளது. வன்னியில் உள்ள ஒவ்வொரு குடும்பமும், காணமற்போன யாரோ ஒருவரைத் தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். எஞ்சிய கனவைத்தவிர வேறு எதுவுமே அவர்களிடம் இல்லை. ஆகக் குறைந்தது, வீடுகளுக்கு முன்னால் நிற்கின்ற இராணுவத்தினர் கொஞ்சம் அப்பால் நகரவேண்டும்!"

"ஏகப்பட்ட தமிழ்த் தலைமைகள் ஈழமக்களுக்காக உருவாகிவிட்டனவே?"

"ஆமாம்... மக்கள் எண்ணிக்கையைவிட தலைவர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. பந்தயத்தில் நாமும் இருக்க வேண்டும் என்று தான் சிலர் நினைக்கிறார்கள். எல்லோருக்கும் ஈழம்தான் கனவாக இருக்கிறது. ஆனால், அதை அடையும் வழி தெரியாமல் குழுக்களாகப்பிரிந்து மல்லுக் கட்டுகிறார்கள். விடுதலைப் புலிகளுக்கு இருந்த ஒட்டுமொத்த தமிழ்ச் சமுகத்தின் ஆதரவு, இப்போது எந்த அமைப்புக்கும் இல்லை. என்பதுதான் உண்மை. கசந்துபோன மனநிலையில் இருக்கும் ஈழமக்கள், இன்று சில



உண்மைகளை உணர்ந்திருக்கிறார்கள். இனப்படுகொலை அறிக்கையை ஐ.நா வெளியிடுகிறது என்றால், "படுகொலையைத் தடுக்காத ஐ.நா இப்போது அறிக்கை வெளியிடுகிறதா?" என்று கேட்கிறார்கள். இந்தக் கேள்வி மட்டுமே எங்கள் மக்களின் நியாயமான உணர்வு என்று நான் நம்புகிறேன்!"

"ஈழமக்களின் இன்றைய தேவை என்ன?"

"நிச்சயமாக அவர்களால் ஆயுதங்களை உண்ணமுடியாது. உலகின் மிகமோசமான ஒரு இராணுவக் கண்காணிப்பின் கீழ் அவர்கள் வாழ்கிறார்கள். தமிழகத்தில் இருந்து சிலர், "ஐந்தாவது ஈழப்போர் வெடிக்கும்; பிரபாகரன் வருவார்" என்கிறார்கள். இதை எல்லாம், துளியளவுகூட பாதிக்கப்பட்ட மக்கள் இரசிக்கவில்லை. இரசிக்கும் நிலையிலும் அவ்ர்கள் இல்லை. அவர்களின் நிலம், உணவு, வேலை, கல்வி எனச் சகல வாழ்வுரிமைகளும் பறிக்கப்பட்டு இருக்கிறன. எங்கும் பெளத்த விகாரைகளை நிறுவுகிறது இலங்கை அரசு. ஈழத்தமிழர்களைச் சூழ்ந்துள்ள இருண்ட மேகங்கள் கலையாத வரை அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாது, அவர்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்பவும், இழந்தவற்றை பெற்றுக் கொடுக்கவுமே, நாம் குரல் கொடுப்பது நேர்மையாக இருக்கும்!"

"இந்தியா, இலங்கையை பயன்படுத்தகிறதா? இலங்கை, இந்தியாவை பயன்படுத்துகிறதா?"

"இந்தியா தன் அரசியல் இராணுவ நலன்களுக்காக இலங்கையைப் பயன்படுத்த முயல்கிறது. மிகக் குறைந்த தூரத்தில் இலங்கை இருந்தாலும் இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தியாவின் அரசியல் ஆதிக்கம் இலங்கையில் அண்டவிடாமல் தனித்துவமிக்க ஒரு நாடாக இலங்கையைக் காத்து வருகிறார்கள் சிங்கள ஆட்சியாளர்கள். இது, அவர்களின் தனித்திறமை என்றே சொல்லலாம். ஜெயவர்த்தன தொடங்கி, இன்றைய ராஜபக்ஷ வரை இலங்கை விரித்த வலையில் தான் தொடர்ந்து இந்தியா சிக்கியிருக்கிறது. வங்கதேசம், நேபாளம், மாலைதீவு வரை செல்வாக்கு செலுத்தும் இந்தியாவை இலங்கை மிகத் தந்திரமாகக் கையாளுகிறது என்பதே உண்மை. தனக்குத் தேவையான எல்லாவற்றையும் இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் தந்திரத்தை இலங்கை மிக நுட்பமாகச் செய்துவருகிறது என்றே நினைக்கிறேன்!"

டி.அருள்.எழிலன்

# கப்பற்றொழில் வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வு

எனவே, படித்தவர்கள் கூட அறிவை வளர்த்துக் கொள்வதற்காகவும் செய்து கொண்டிருக்கும் வேலையில் தொடர்ந்து பணிபுரிவதற்கும் வயதுவந்த பின்னரும் கல்லூரியில் கற்கிறார்கள்.

**officer ஆக வந்த பின்னர் எவ்வளவு காலம் ஒரு கப்பலில் தொடர்ந்து வேலை செய்தல் வேண்டும்? எவ்வளவு காலம் லீவு தருவார்கள்?**


வழக்கமாக நல்ல கம்பனியின் கப்பலில் வேலை செய்யும் officer கள் 6 தொடக்கம் 9 மாதங்கள் வரை நல்ல வேலை செய்தல் வேண்டும். வழக்கமாக ஒரு மாதம் வேலை செய்தால் 10 நாட்கள் லீவு தருவார்கள். எனினும் கம்பனிகளுக்கிடையே நிறைய வித்தியாசங்கள் உண்டு. சில ஐரோப்பிய கம்பனிகளிலும் ferry போன்ற உள்நாட்டு கப்பல்களிலும் ஒரு மாதம் வேலை ஒரு மாதம் லீவு என்று ஒப்பந்தங்கள் உள்ளன. Certificate வைத்திருப்போர் தொடர்ந்து கம்பனியில் வேலை செய்வதனால் திரும்பவும் வேலைக்கு எடுப்பார்களோ என்ற யோசனைக்கு இடம் இல்லாததனால் துணிந்து லீவில் வீட்டிற்கு வரலாம்.

**கப்பலில் தொடர்ந்தும் தொழில் புரிய வேண்டுமா? சிறிது காலத்தின் பின்னர் குடும்பத்தினருடன் சேர்ந்து நாட்டில் வந்து மற்றவர்கள் போல தொழில் புரிய வழிவகை உண்டா?**

நிறைய உண்டு. Deck officer ஆக வேலை செய்தவர்கள் harbour கள் இருக்கும் இடத்தில் shipping மற்றும் மீன்பிடி fishing boat building, ship building சம்பந்தப்பட்ட தொழில்கள் புரிவதற்கும் Engineerning officer ஆக வேலை செய்தவர்கள் marine engineering மாத்திரம் அல்லாது மற்றைய engine சம்பந்தப்பட்ட தொழில்களும் பார்க்க முடியும்.

**எனக்கு கப்பலில் சேர விருப்பமில்லை. ஆனால், கப்பல் சார்ந்த shipping தொழில் பார்க்க விருப்பமாக இருக்கின்றது?**

இதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று ஏதாவது shipping கம்பனி இன் office ஒன்றில் சிறிய வேலையில் சேர்ந்து shipping படிப்பு படித்து உயர்தல். மற்றையது shipping இல் diploma படிப்பு அல்லது பட்டப்



படிப்பு பெற்றபின்னர் shipping கம்பனியில் சேர்ந்து வேலை செய்தல். இதற்கு கப்பல் சம்பந்தப்பட்ட பாடங்கள் படிக்க வேண்டியிருப்பதனால் கப்பலில் வேலை செய்தவர்களுக்கு shipping படிப்பு இலகுவாக இருக்கும்.

**ஆண், பெண் இருசாராரும் கப்பலில் தொழில் புரியலாமா?**

அநேகமான நவீன கம்பனிகளில் ஆண், பெண் இருசாராருக்கும் தொழில் புரிய இடம் தருகிறார்கள்.

**மேலதிக தகவல்கள்**

நீங்களாகவே வேலை தேடுவதற்கான வழிவகைகள்

(1) Mandatory Basic safety course களுக்கான கல்வி கற்று அதற்கான certificate களையும் அதன்மூலம் CDC (Continuous Dischárge Certificate)யும் பெற்று வைத்திருத்தல். இதற்காக Colombo இல் இரண்டு college கள் உள்ளன. Trincomalee இலும் அண்மையில் ஒரு college இனது கிளை தொடங்கப்பட்டுள்ளது. அத்துடன் சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் மருதனார் மடத்திலும் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

(2) இலங்கையில் உள்ள college களின் விபரங்கள்:

வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கத்தின் மாலுமிகள் கல்லூரி (இது தொடக்கத்தில் அடிப்படை அறிவை வளர்க்கும் கல்லூரியாகவே இயங்கும்)

Colombo International Nautical & Engineering College (CINEC) Millennium Drive, IT Park, Malabe , Sri Lanka

Tel:0094114486400,Fax: 0094112413505,e-mail:info@cinec.edu:Web site: www.cinec.edu

Lanka Academy of Technological Studies (Private) Limited

No. 542, Galle Road, Panadura, Sri Lanka.

Tel:0094384281556 & 0094382232074, Hotline: 0094714901072, Fax: 0094382240132,Web: http://www.seamatelanka.com

Email info@seamatelanka.com @ academy@seamatelanka.com

(3) CINEC-208, LOWER ROAD ORR' SHILL TRINCOMALEE+ 94(026)492 7979

(4) CENIC SKILL CENTRE-KKS ROAD, MARUTHANARMADAM-JAFFNA-0214925925

✦ ஆங்கிலம் கற்றுக்கொள்ளுங்கள், பேசப் பழகிக் கொள்ளுங்கள். வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்தில் ஆங்கிலம் கற்பிக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க மற்றும் சரளமாகப் பேசப் பழகிக் கொள்ளுங்கள். Nautical @ Engineering College இல் படிப்பதற்கும் வெளிநாட்டுக் கப்பல் கம்பனிகளுடன் தொடர்பு கொண்டு வேலைவாய்ப்புகள் பற்றி அறிய ஆங்கிலத்தில் சரளமாக பேசத் தெரிவது மிக முக்கியம். அது மாத்திரம் அல்ல கப்பல் officer ஆக வேலை செய்வதற்கும் அதன்பின்னர் shipping கம்பனியில் வேலை செய்தல் அல்லது நிர்வகித்தல் போன்றவற்றிற்கும் ஆங்கில அறிவு மிக முக்கியமாகும்.

ந.சிவரத்தினம்
சர்வதேச இணைப்பாளர்
வல்வை. மாலுமிகள் நலன்புரிச் சங்கம்.

✦ Computer பாவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்தினால் Computer கல்வி கற்பிக்க ஏற்பாடுகள் விரைவில் நடைபெறவிருக்கின்றன. இதனால் internet மற்றும் email களின் மூலம் வெளிநாட்டு கப்பல் கம்பனிகளுடன் தொடர்பு வசதிகளை ஏற்படுத்துதல் வேண்டும்.

அது மாத்திரம் அல்ல கப்பலில் வேலை செய்வதற்கு இது முக்கிய பாடமாக கற்பிக்கப்படுகின்றது. நவீன கப்பல்கள் Computer மயமாக்கப்பட்டு வருகின்றன. எனவே, Computer பாவிக்கப் பழகுவது தொடர்ந்து பயன் தரும். (தொடரும்)

# இலங்கைப் பாதாளக் குழுக்கள் இத்தாலியிலும்

(கொழும்பு)

இலங்கைப் பாதாளக் குழுக்கள் இத்தாலியில் கப்பம் கோரல்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டிலிருந்து தப்பிச் சென்ற பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இத்தாலி வாழ் இலங்கையர்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இத்தாலியில் வாழும் இலங்கையர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்து மாதாந்தம் பணம் அறவீடு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பாதாள உலகக் குழுவினரின் செயற்பாட்டை கண்டிக்கும் நோக்கில் இத்தாலி வாழ் இலங்கையர்கள் விரைவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுவினரை ஒடுக்கும் நோக்கில் இலங்கையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதனைத் தொடர்ந்து பலர் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

தெற்கின் முக்கிய பாதாள உலகக் குழுத் தலைவர்களில் ஒருவரான ரத்கம நதுன், கெசல்வத்தே கொட குமார, மெகா அஜித் போன்றவர்களும் தற்போது இத்தாலியில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதாள உலகக் குழு உறுப்பினர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் இத்தாலி வாழ் இலங்கையர்கள் இதுவரையில் அந்த நாட்டு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# இளையோர் மாநாட்டை நடத்த சீனாவின் ஆதரவை நாடும் இலங்கை

(கொழும்பு)

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உலக இளையோர் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கான ஆதரவைப் பெறுவதற்குரிய முனைப்புக்களில் இலங்கை அரசாங்கம் இறங்கியுள்ளது.

இது தொடர்பிலான தீர்மாதனத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் எட்டுவதற்காக சீனா மற்றும் குழு 77 ஆகிய நாடுகளின் ஆதரவை பெறுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக இளையோர் மாநாட்டை இலங்கையில் நடத்துவது தொடர்பில் இலங்கையின் இளையோர் விவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் இலங்கையின் இளையோர் விவகார அமைச்சின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சரவை அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாக இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உலக இளையோர் மாநாட்டை இலங்கையில் நடத்துவது தொடர்பில் சீனா மற்றும் குழு 77 ஆகிய நாடுகளின் ஆதரவை பெறுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. (அ-2)

# ஆணைக்குழுவிடம் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கு வழக்குத் தொடர முடியும்!- சட்டமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மைகளைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பல்வேறு நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பாதகமான சாட்சியங்கள் இருப்பின் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படுமென சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிக்கின்றது.

உண்மைகளைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி செயலகம் கடந்த வாரம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்திருந்தது.

ஆணைக்குழு அறிக்கையில் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திருமதி ஈவா வனசுந்தர தெரிவித்துள்ளார்.

விசாரணையின் போது அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக போதுமான ஆவணங்கள், சாட்சியங்கள் இருந்தால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம் சனல் 4 வீடியோ தொடர்பாகவும் விசாரணைகளை மேற்கொள்ளும் சட்டமா அதிபர் திணைக்கள பிரதி செயலாளர் நாயகம் ஒருவரின் தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவொன்றே இந்த அறிக்கையை ஆராயும் நடவடிக்கைகளை இப்போது ஆரம்பித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# அநீதி இழைக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டியது அவசியம்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக கல்வித்துறை தொடர்பில் நாட்டுமக்களின் நம்பிக்கை தளர்வடைந்துள்ளதாகவும் கல்வித்துறை சார் அதிகாரிகளே இதற்கு முழுப் பொறுப்பினையும் ஏற்க வேண்டும் எனவும் விஞ்ஞானத்துறை சார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைமையானது நாட்டின் எதிர்காலத்திற்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பிரிவின் பேராசிரியர் பீ.டெனிசன் தெரிவித்துள்ளார்.

கொள்கை ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது பரீட்சை தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள வெறுப்புணர்வுகளுக்கு தீர்வு காண முடியும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

பரீட்சை பெறுபேற்று குளறுபடிகள் காரணமாக அநீதி இழைக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வது சம்பந்தப்பட்ட தரப்பினரின் பொறுப்பாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை தொடர்பிலும் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையின்மை சமூகத்தில் பாரதூரமான ஒரு நிலைமையை தோற்றுவித்து வருவதாக களனி பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறை பேராசிரியர் கே. கருணாதிலக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கல்வி அமைச்சின் கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் கிரேரோ தெரிவிக்கையில்,

எந்தவொரு மட்டத்திலும் தவறு நேரக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக கூறினார்.

யாருடையதேனுமொரு இன்றி இயங்கி வருகின்ற கல்வித்துறை சார் உயர் நிறுவனமான பரீட்சைகள் திணைக்களம்மீதான நம்பிக்கையை இழக்க வேண்டியதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ரணில் அரசுடன் இணைந்து ஊடக அடக்குமுறையில் ஈடுபடுகின்றார்

## தென்மாகாண சபை உறுப்பினர்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் இணைந்து ஊடக அடக்குமுறையில் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தென்மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன தெரிவித்துள்ளார்.

தமது தவறுகள் வெளியாவதை தடுக்க அரசாங்கங்கள் ஊடக அடக்குமுறையில் ஈடுபடும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் ஊடக உரிமை பாதுகாப்புக்காக குரல் கொடுக்க வேண்டும் என்ற போதிலும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள இரகசியமான உடன்பாடு காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் ஊடக அடக்கு முறைக்கு ஆதரவு வழங்கி வருகிறார் எனவும் குணரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனநாயகத்துக்கு எதிராக செயற்படும் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேவையில்லை. அதிகாரத்தை கைப்பற்ற முடியாத இயலாமை காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியை பாதுகாத்துக் கொள்ள ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்து வரும் வேலைத் திட்டங்களை அருவருக்கத்தக்கதென கண்டிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# சிலகட்சிகள் அரசாங்கத்திலிருந்து பிரிந்து செல்லக்கூடிய அபாயம்

## திவயின தகவல்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் அரசாங்கத்திலிருந்து விலகிச் செல்லக்கூடிய அபாயம் உள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

13 ஆம் திருத்தச்சட்டத்தைத் தாண்டிய தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டால் குறித்த கட்சிகள் இரண்டும் ஆளும் கட்சியிலிருந்து வெளியேறலாம் என்றும் 13 ஆம் திருத்தச்சட்டத்தை தாண்டிய தீர்வுத் திட்டம் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் கடுமையான நிலைப்பாட்டைப் பின்பற்றி வருகின்றதாகவும் அப்பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது கொள்கைகளுக்கு எதிரான வகையில் தீர்வுத்திட்டம் அமைந்தால் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது குறித்து இரண்டு கட்சிகளும் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# உலகில் அதிக நச்சுத்தன்மையான வளி இந்திய நாட்டில் உள்ளது

## ஆய்வில் தகவல்

அமெரிக்காவின் யேல் மற்றும் கொலம்பியா ஆகிய பல்கலைக்கழகங்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் உலகில் அதிகளவான நச்சுத் தன்மையான வளி இந்தியாவில் உள்ளதாக தெரியவந்துள்ளது.

132 நாடுகள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் அதிகளவு நச்சு தன்மையான வளியுள்ள நாடுகளின் பட்டியலில் பங்களாதேஷ் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதற்காக பிராந்தியத்திலுள்ள அநேகமான நாடுகளில் அதிகளவான நச்சுத்தன்மையான வளியே காணப்படுவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக நேபாளம், பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகள் அந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆய்வு நாடுகளின் சூழலியல் வெளிப்பாடுகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை சிறந்த சூழலியல் செயற்பாடுகளை வெளிப்படுத்திய நாடுகளின் பட்டியலில் ஐரோப்பிய நாடுகளான சுவிற்சர்லாந்து, லட்வியா ஆகியன முதலிரண்டு இடங்களைப் பெற்றுள்ளன.

நோர்வே, லக்ஷம்போர்க் மற்றும் கொஸ்ரோறிக்கா ஆகிய நாடுகள் அடுத்த மூன்று இடங்களைப் பெற்றுள்ளதாக குறித்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# தமிழினத்தின் கொடூரச் சம்பவங்களை தென்அமெரிக்க மக்களிடம் கொண்டு சென்றுள்ளது பிரித்தானிய தமிழர் பேரவை

இலங்கை அரசாங்கம் தமிழினத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூர சம்பவங்களை Diario latarde ஊடகமூடாக 2 கோடியே 22 இலட்சம் தென் அமெரிக்க மக்களிடம் பிரித்தானிய தமிழர் பேரவை கொண்டு சென்றுள்ளது.

1948 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் தமிழ்மக்கள் மீது இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பான செய்தியினை Diario latarde ஊடகமானது வெளியிட்டிருந்தது.

இதில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆண்டு மேமாதம் 18 வரையான காலப்பகுதிகளில் தமிழ் மக்கள் மீதான உச்சக்கட்ட இன அழிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் அங்குமனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் நிகழ்ந்துள்ளது என்பதையும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இப்படுகொலையில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டும் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 மக்கள் காணாமல்போயும் உள்ளனர் என ஆர்ச் பிஷப் இராயப்பு ஜோசப்பால் உறுதிப்படுத்தப்பட்ட தகவலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தமிழினத்திற்கான நீதி வேண்டி குரல் கொடுத்துவரும் பிரித்தானிய தமிழர் பேரவையானது இச்செய்திக்கான ஆதாரங்களை Diario latarde ஊடகமூடாக வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதன்பாகம் ஒன்று கடந்த 24 ஆம் திகதி அன்று வெளிவந்தது. இதனை 48 மணித்தியாலங்களில் 2 கோடியே 22 இலட்சம் மக்கள் பார்வையிட்டிருப்பதாக அவ்வூடகம் குறிப்பிட்டிருக்கின்றது.

இதில் பாகம் இரண்டு வெளியீடு நேற்று முன்தினம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பூநகரி பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் காணி சம்பந்தமான பிரச்சினைகள், வீடு, வீதி, போக்குவரத்து, சுகாதாரம், கல்வி சம்பந்தமான மக்கள் குறைகள் ஆராயப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்கள தலைவர்களால் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன.

இக்குழுக்கூட்டமானது நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தலைமையில் பூநகரி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய கிராஞ்சி கிராமசேவகர் பிரிவில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட 64 குடும்பங்களுக்கு சொந்தக்காணி இன்மை சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு தீர்வாக 64 குடும்பங்களுக்கும் அரச காணிகள் வழங்கப்படவும் ஒன்றுக்கு மேற்பட்ட அரச காணிகளை அத்துமீறி பிடித்து வைத்திருப்போரை காணியில் இருந்து வெளியேற்ற சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீனிவாசன், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், ஓய்வு பெற்ற அரச அதிபர் நி. இராசநாயகம் மற்றும் பொலிஸ், இராணுவ அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளென நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இத்தீர்மானங்களை நிறைவேற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3-84)

# எனக்கு 78; உனக்கு 17

17 வயதான ஒரு யுவதி 78 வயதான ஒரு நபருடன் இரகசியமாக தப்பிச் செல்ல முயற்சித்த போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேசவாசிகளே இவர்கள் தொடர்பான தகவலை பொலிஸாருக்கு வழங்கியுள்ளனர். கடந்த சில காலங்களாக இவர்கள் இருவரும் ஒன்றாக வாழ்ந்து வந்த நிலையில் யுவதிக்கு 18 வயது பூர்த்தியான பின்னர் அவரை திருமணம் செய்து கொள்வதற்கு எண்ணியிருந்ததாக 78 வயதான சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

இது ஒரு காதல் தொடர்பு எனவும் குறித்த நபர் கூறியுள்ளமை விசேட அம்சமாகும்.

எவ்வாறாயினும் பொலிஸ் சிறார் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவின் ஊடாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலனறுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# நாடாளுமன்ற தெரிவுக்குழு காலத்தை கடத்தும் நடவடிக்கை- எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் குறித்து கலந்துரையாடுவதற்காக நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொள்ள போவதில்லை என எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இது காலத்தை கடத்தும் நடவடிக்கை என ஐக்கிய தேசியக்கட்சியும் ஜே.வி.பி.யும் கூறுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க பரிந்துரை செய்துள்ள இந்த அரசியல் அமைப்பு திருத்தம் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்புடனேயே பேச்சு நடத்த வேண்டும் எனவும் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளாத நிலையில் தாம் கலந்து கொள்வதில் பலனில்லை என ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் கூறுகின்றன.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க,

அரசாங்கம் இதுவரை நியமித்த குழுக்களால் எந்த பயனும் ஏற்படவில்லை.

இதனால் அரசாங்கம் அரசியல் அமைப்பு திருத்தம் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய யோசனையை முன்வைக்கும் வரை தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு தமது பிரதிநிதிகளை நியமிக்க போவதில்லை எனவும் கூறியுள்ளார்.

அதேவேளை தேசியப் பிரச்சினைக்கு தீர்வு 13 ஆவது அரசியல் அமைப்பித் திருத்தம் இல்லை என்பதால் தமது கட்சி தெரிவுக்குழுவிற்கான பிரதிநிதிகளை நியமிக்காது என ஜே.பி.வி. தெரிவித்துள்ளது. (அ-2)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசாங்கத்திற்கு நாட்டமில்லை

### ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசாங்கத்திற்கு நாட்டம் கிடையாது என ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டிலால்காந்த தெரிவித்துள்ளார்.

முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் மெத்தனப் போக்கைப் பின்பற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காகவே அரசாங்கம் இனப்பிரச்சினையை பயன்படுத்திக் கொள்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சமூகத்தையும் சிறுபான்மை மக்களையும் ஏமாற்றும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, சம்பள உயர்வு, கல்வி, சுகாதாரத்துறைப் பிரச்சினைகள் போன்றவற்றுக்கு தீர்வு வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த வெற்றியைக் காட்டியே ஆட்சி நடத்தி வந்த அரசாங்கம் தற்போது இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது குறித்து பிரசாரம் செய்து ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சட்டத்தரணிகளின் உரிமைகள் வர்த்தமானியில் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

தமது கட்சிக்காரர்களின் பிரச்சினை தொடர்பாக பொலிஸ் நிலையம் செல்லும்போது சட்டத்தரணிகளின் உரிமை தொடர்பான ஒழுங்குவிதிகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இதற்காக 3 மாத கால அவகாசத்தை பிரதி சொலிசிஸ்ரர் ஜெனரல் சவேந்திர சில்வா கோரினார். பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த தனது கட்சிக்காரர் தொடர்பாக பொலிஸ் நிலையம் சென்ற வழக்குரைஞர் ஒருவரை பொலிஸார் தகாத முறையில் நடத்தியதாக குற்றம் சாட்டி வழக்குரைஞர் டி.டபிள்யூ. சி.மொஹத்தி மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அப்போதைய பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ன, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் நெவில் பியதிகம, சட்டமா அதிபர் ஆகியோர் இம்மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு 03.04.2009 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இரு தரப்பினரும் இணங்கிப் போவதற்குத் தீர்மானித்திருந்தனர். அதையடுத்து இணக்கப்பாடுகளை பிரேரணையாக சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இவ்வழக்கு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க,எ நீதியரசர்கள் பி.ரட்னாயக்கக, பிரியத் தீப் ஆகியோர் முன்னிலையில் உயர்நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது பிரதி சொலிசிஸ்ரர் ஜெனரல் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்வழக்கு எதிர்வரும் மே 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (அ-2)

## கிளி.பொலிஸாரால் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் பொலிஸ் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவினால் பாரிய நடமாடும் சேவையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பொலிஸின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரி எம்.எல். ஹரிப்டீன் தெரிவிக்கையில்,

சிறுவர் மேம்பாடு சிறப்பு தேவையுடையோருக்கான சுயதொழில் வாய்ப்பு மற்றும் ஏனையோருக்கான வாழ்வாதார மேம்பாடுகளை மேற்கொள்வதற்கான மையம் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ-2)



நெடுந்தீவு பிரதேசத்தில் கடற்படையினரின் உதவியுடன் நிறுவப்பட்ட 20 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண கட்டளைத்தளபதி ரவீந்திரா விஜயகுணரட்ன, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் இணைந்து பயனாளி ஒருவருக்கு வீட்டுப்பத்திரம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

## கொழும்பு கம்பன் கழகத்தின் பேச்சு, கவிதை போட்டிகள்

(கொழும்பு)

கொழும்புக் கம்பன் கழகத்தினால் இவ்வாண்டுக் கம்பன் விழாவை முன்னிட்டு நடத்தப்படும் அமரர் துரை விஸ்வநாதன் நினைவு பேச்சுப் போட்டிகளும் அமரர் பொன் பாலசுந்தரம் நினைவு கவிதைப் போட்டிகளும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் பத்திரிகைகள் மூலம் முன்னரே கோரப்பட்டிருந்தன. விண்ணப்பித்த போட்டியாளர்களுக்கான அனுமதியட்டைகள் போட்டியாளர்களின் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டியாளர்கள் அனுமதி அட்டைகளுடன் போட்டி மண்டபத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

போட்டிகளுக்கு விண்ணப்பித்தோர் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடினும் தக்க சான்றுகளுடன் நேரடியாகப் போட்டி மண்டபத்திற்கு வருகை தரலாம் எனக் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

போட்டிகள் 02 பிரிவுகளாக இடம்பெறும். கீழ்ப்பிரிவுப் போட்டிகளில் 19 வயதுக்குட்பட்டோரும் மேற்பிரிவுப் போட்டிகளில் 20-35 வயதுக்குட்பட்டோரும் கலந்து கொள்ளலாம்.

பேச்சு மற்றும் கவிதை போட்டிக்கான தலைப்புகள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும் எனவும் நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்பெறும் முதல் மூன்று போட்டியாளர்களும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்க, வெள்ளி, வெண்கல பதக்கப் பரிசில்கள் வழங்கப்படும் எனவும் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

மேலும் போட்டிகளில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## சிறுபான்மைக்கட்சிகளுடன் த.தே.கூட்டமைப்பு பேசும்

### சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபை அதிகாரங்கள் உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலை முன்னணி உட்பட ஏனைய சிறுபான்மை கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் என கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. நேற்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஸ்ரீலங்கா முஸ்ஸிம் காங்கிரஸுடன் முதற்கட்ட பேச்சுவார்த்தைகளை ஏற்கனவே நடத்தியுள்ளது. அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் நாடாளுமன்றம் கூடும் தினங்களில் இடம்பெறுமென முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் சிவனேசத்துரை, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் குறித்து கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசு கூட்டமைப்பு பேச்சுக்கள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது தெரிந்ததே. நாடளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பு பிரதி நிதிகளை நியமிக்க வேண்டும். அதன் பின்னர் பேச்சுக்களை தொடர்ந்து நடத்தலாம் என அரசு பேச்சுவார்த்தைக்கான குழு உறுப்பினர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பு ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது அரசு, கூட்டமைப்பு பேச்சு வார்த்தையில் எட்டப்படும் உடன்பாடுகள் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்வைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளது. ஜனாதிபதி இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

அரசு, கூட்டமைப்பு பேச்சுக்களில் இணக்கம் எதுவும் எட்டப்படாத நிலையில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்குபிரதிநிதிகளை நியமிப்பதில் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை என கூட்டமைப்பு உறுதிபடத் தெரிவித்துள்ளது. (அ-2)


## மரண அறிவித்தல்

### திருமதி.சந்திரபூபதி கணபதிப்பிள்ளை



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர், சங்கீதம் வலிகாமம்) அவர்களின் பாசமிகு பாரியார் திருமதி. சந்திரபூபதி அவர்கள் நேற்று 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரராசா (ஓய்வுபெற்ற பிரதேச செயலர், சங்கானை), சந்திரபாலன் (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்), சந்திரவரதன் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்ற கேசவதாஸ் (சிங்கப்பூர்), கமலலோசனி நல்லையா, சகலகலாவல்லி சந்திரராசா (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்), காலஞ்சென்ற இராஜேஸ்வரி, சந்திரபாலன், செல்வரத்தினம், சந்திரவரதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.01.2012 திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
சு.கணபதிப்பிள்ளை
(சங்கீதபூஷணம்)
தொ.பே:-0778946101

தபாற்கந்தோர் முன்பாக,
சுழிபுரம்.

(7398)

# கடாபியின் ஆதரவாளர்கள் புதிய தலைவர்களை கொடுமைப்படுத்துவதை உடன் நிறுத்தவேண்டும்

## கனடா அறிவிப்பு

லிபியாவில் கடாபியின் ஆதரவாளர்களை புதிய தலைவர்கள் கொடுமைப்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என கனடா கேட்டுக் கொண்டுள்ளது. பல மனிதநேய சர்வதேச அமைப்புக்கள் லிபியாவின் சிறைகளில் கடாபி ஆதரவாளர்கள் படும் வேதனையை விளக்கி அறிக்கை அனுப்பியுள்ளன.


பல கைதிகள் சித்திரவதையால் உயிரிழந்தனர். விசாரணையின் போது அதிக கொடுமைக்கு உள்ளானவர்களை வைத்தியசாலைக்கு அழைத்து வந்து சிகிச்சை பெற்ற பின்பு மீண்டும் விசாரணை செய்து துன்புறுத்துகின்றனர்.

லிபியாவில் உள்ள சர்வதேச பொதுமன்னிப்பு அமைப்பின் மூத்த ஆலோசகர் சித்திரவதைக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுத்த பிறகும்கூட இதில் எந்த முன்னேற்றமும் இல்லை என்று தமது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இவர்களில் இறந்து போனவரின் குடும்பத்திற்கு எவ்வித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை. நீதிமன்ற விசாரணையும் நடத்தப்படவில்லை.

சித்திரவதைகளுக்குள்ளான கைதிகளின் தலை, கை, கால் முதுகு மற்றும் பிற பாகங்களில் வெளிக்காயங்கள் உள்ளன. இவர்கள் தலைநகரான டிரிபோலியிலும் ஏனையசிலநகரங்களிலும்சிறையில் அவதிப்பட்டு வருகின்றனர். சிறைக் கைதிகள் சித்திரவதைக்கு உள்ளாகுகின்றனர் என்ற சர்வதேச அமைப்புகள் குரலெழுப்பியவுடன் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இந்த பிரச்சினையை உடனடியாக லிபியா தலைவர்கள் சரி செய்ய வேண்டும். சித்திரவதையை முற்றிலுமாக நிறுத்திவிட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. (அ-2)

# சிறையில் அடைபடவும் நான் தயார்- கிலானி



உச்ச நீதிமன்றத்தை அவமதித்த வழக்கில் என்னை சிறை அடைக்க வேண்டும் என நீதிமன்றம் விரும்பினால் அதற்கும் நான் தயார் என பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து பிரதமர் கிலானி அளித்த பேட்டியில் கூறியதாவது,

ஜனாதிபதி சர்தாரி மீதான ஊழல் வழக்குகளை தொடங்குவதற்கு சுவிஸ் அதிகாரிகளுக்கு கடிதம் எழுத வேண்டும் என உச்ச நீதிமன்றம் முடிபு செய்துள்ளது.

ஆனால் அரசியல் அமைப்புச் சட்டப்படி ஜனாதிபதி, பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் எவ்வித வழக்கும் அவர்கள் மீது தொடுக்க இயலாத அளவில் சட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மிக நீண்ட காலமாக நடக்கும் இவ்வழக்கில் ஜனாதிபதி ஏற்கனவே எட்டு ஆண்டுகள் சிறையில் இருந்தார்.

எனினும் என்னையும் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என நீதிமன்ற ம் விரும்பினால் நான் அதற்கும் தயாராக இருக்கி

# அரசியலில் இருந்து ஓய்வுபெற முடிபுசெய்கிறார் ஹிலாரி



(வோஷிங்டன்)

தீவிர அரசியிலிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் பராக் ஒபாமா வெற்றி பெற்றாலும் தான் அரசியலில் நீடிக்க விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சகத்தில் உள்ள நெருங்கிய நண்பர்களிடம் அவர் இத்தகவலை தெரிவித்துள்ளார். தொடர்ந்து இரண்டாவது முறையாக வெளியுறவு அமைச்சர் பதவியில் நீடிக்க விரும்பவில்லை என்றும் தனக்குப் பதிலாக வெளியுறவு அமைச்சராக மற்றொருவரை ஒபாமா நியமிக்கும் வரை இப்பதவியில் இருக்க விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

20 ஆண்டுகளுக்கும் மேலாக தீவிர அரசியலில இருந்துவிட்டதால் போதும் என்ற மன நிலைக்கு வந்துவிட்டதாகவும் தனக்கு ஓய்வு தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து இதேபோன்று அதி முக்கியத்துவம் வாய்ந்த பதவியில் நீடிக்க விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

1993 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை பில் கிளின்டன் ஜனாதிபதியாக இருந்தபோது அமெரிக்காவின் முதல் பெண்மணியாக ஹிலாரி வலம் வந்தார். 2001 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை நியூயோர்க்கின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

ஜனாதிபதி தேர்தலில் கட்சி சார்பில் ஹிலாரி-ஒபாமா போட்டியிட்டனர். கடைசி நேரத்தில் ஒபாமாவுக்கு வாய்ப்பு கிடைத்தது. இதையடுத்து ஒபாமா ஜனாதிபதியாக தேர்ந்தெதுக்கப்பட்டவுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் பதவி அளிக்கப்பட்டது. (அ-2)

# சிரியாவில் மீண்டும் கலவரம்; பாதுகாப்பு படையினர் பலி



அரபு நாடான சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதி ராக மக்கள் புரட்சி நடத்தி வருகின்றார்கள். இதனால் தலைநகர் டமாஸ்கசில் கலவரம் மூண்டது.

இராணுவ நடவடிக்கை மூலம் கலவரம் கட்டுப்படுத்தப்பட்டது. அங்கு வன்முறையை கட்டுக்குள் கொண்டு வருவதில் அரபு கூட்டமைப்பு சமரச முயற்சி மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் சிரியாவில் நேற்று மீண்டும் கலவரம் ஏற்பட் டது. அரசுக்கு எதிராக போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். அவர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் பல இடங்களில் மோதல் ஏற்பட்டது. இதில் 34 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 23 பேர் பாதுகாப்பு படையினர் ஆவர். (அ-2)

## உலக தரிசனம்

# ஆப்கானில் உள்ள பிரெஞ்சுப்படைகள் 2013ஆம் ஆண்டுக்குள் வெளியேறும்

## பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவிப்பு

(பாரிஸ்)

ஆப்கானில் முகாமிட்டுள்ள பிரெஞ்சு படைகள் 2013 ஆம் ஆண்டுக்குள் முழுவதுமாக வெளியேறி விடும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலொஸ் சர்கோசி தெரிவித்துள்ளார்.

முன்னதாக 2014 ஆம் ஆண்டுக்குள் வெளியேறவே பிரெஞ்சு அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால் கடந்த வாரம் ஆப்கான் வீரர் ஒருவரால் 4 பிரெஞ்சு வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து படைகளைத் திரும்பிப் பெற பிரெஞ்சு அரசு முடிவெடுத்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் 5 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் ஜனாதிபதி நிக்கலொஸ் சர்கோசியை சந்தித்தார். இவர்களது சந்திப்புக்கு பின்னரே இந்த முடிபு அறிவிக்கப்பட்டது.

இது குறித்து சர்கோசி மேலும் தெரிவித்ததாவது,


ஆப்கான் பல்வேஞ இடங்களில் உள்ள பிரெஞ்சு துருப்புக்களை அந்நாட்டின் கிழக்குப் பகுதியான கபீஸ் மாகாணத்தின் பாதுகாப்பு பணிக்கு மாற்ற முடிபு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பிரெஞ்சுப் படைகள் திட்டமிட்ட காலத்துக்குள் நாடு திரும்ப முடியும்.

2012 ஆம் ஆண்டிலேயே ஆயிரம் துருப்புக்கள் ஆப்கானை விட்டு வெளியேறுவார்கள். இது குறித்து ஆப்கானுடனும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள ஏனைய கூட்டணி நாடுகளுடனும் முறையாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2013 ஆண்டுக்குப் பின்னர் சில நூறு பிரெஞ்சு வீரர்களே ஆப்கானில் தங்கியிருப்பர். இவர்கள் அந்நாட்டு பண்டகளுக்கு பயிற்சியளிக்கவே அங்கு இருப்பார்கள். எங்களைப் போலவே நேட்டோ அமைப்பும் 2013 ஆம் ஆண்டுக்குள் பாதுகாப்புப் பணியை ஆப்கானிடம் ஒப்படைப்பது குறித்து பரிசீலனை செய்ய வேண்டும். நேட்டோ படைகள் 2013 ஆம் ஆண்டு செய்யத் திட்டமிட்டுள்ள பணிகள் அனைத்தையும் ஆப்கான் படைகள் ஏற்றுச் செயற்பட வேண்டும் என்பது குறித்து நேட்டோ அமைப்பிடம் தெரிவிப்பேன்.

ஆப்கான் விவகாரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் பேசவுள்ளேன் என்றார் சர்கோசி. (அ-2)

# ஈரானை அழிக்க வெடிகுண்டுகளை தயாரிக்கும் முயற்சியில் அமெரிக்கா



ஈரானின் அணுசக்தி திட்டங்களை தாக்கி அழிக்கும் திறன் கொண்ட பங்கர் பஸ்டர் வெடிகுண்டுகளை அமெரிக்கா தயாரித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பூமிக்கடியில் மிக மிக பாதுகாப்பான முறையில் அணு ஆயுதங்களை தயாரிக்க உதவும் யுரேனியச் செறிவூட்டலில் தாம் ஈடுபட்டிருப்பதாகவும் அதை யாராலும் தாக்க முடியாது எனவும் ஈரான் சமீபத்தில் அறிவித்தது.

இதையடுத்து ஈரானின் மிக பாதுகாப்பான அணுசக்தி நிலையங்களை தாக்கும் வகையிலான சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை தயாரிக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டிருப்பதாக அமெரிக்காவில் இருந்து வெளிவரும் வால்ஸ்ட்ரீட் ஜர்னல் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வெடிகுண்டு மொத்தம் 20 அடி நீளம் கொண்டது. 5 ஆயிரத்து 300 பவுண்டு எடை கொண்ட வெடிபொருட்களை தாங்கி செல்லும் சக்தியும் பூமியில் 200 அடி ஆழத்துக்கு ஊடுருவும் திறனும் கொண்டது.

இதுகுறித்து அப்பத்திரிகையில் கூறப்பட்டிருப்பதாவது,

20 குண்டுகளைத் தயாரிக்க அமெரிக்கா 330 மில்லியன் டொலர் செலவழித்துள்ளது. இந்த வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்ட போது ஈரானின் தற்போதைய பாதுகாப்பான அணுசக்தி நிலையங்களை தாக்கும் அளவிற்கு அவற்றின் திறன் இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே சக்தியை அதிகரித்து தயாரிப்பதற்காக கூடுதலாக 82 மில்லியன் டொலர் நிதியை அரசிடம் பென்டகன் கோரியுள்ளது. (அ-2)

நம்மிடமுள்ள குறைகளை நீக்கி கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிஷ்டமாகும்.
- கதே

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கூட்டமைப்பின் காலங்கடந்த ஞானம் நிறைவேற என்ன செய்ய வேண்டும்?

இனப்பிரச்சினைக்கான தீர்வில் சர்வதேச மத்தியஸ்தம் தேவையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கை நியாயமானதென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், சர்வதேச மத்தியஸ்தம் தேவையென்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலங்கடந்தே உணர்ந்து கொண்டுள்ளது.

யுத்தத்திற்குப் பின்னர் இனப்பிரச்சினை தொடர்பில் அரசும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இருந்தவேளை, அரசுடனான பேச்சுவார்த்தைக்கு சர்வதேச மத்தியஸ்தம் தேவையென்ற கருத்தை இதே பத்தியில் எழுதியிருந்தோம்.

தேவையாயின் அதனை ஆதாரபூர்வமாகவும் நிரூபிக்க முடியும் என்பதையும் இவ்விடத்தில் கூறித்தான் ஆகவேண்டும்.

இலங்கை அரசுடன் எந்தத் துணையும் இன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்குச் சென்றமை மகாதவறு.

கூட்டமைப்பைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தாங்கள்தான் என்பதை நிரூபிப்பதை மட்டுமே அது கருத்தில் கொண்டது.

சர்வதேச மத்தியஸ்தம் பற்றி தாம் ஏதும் கதைக்கப்போய் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை இழக்க வேண்டியதாகி விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக அவசர அவசரமாக அரசுடன் பேசுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்பட்டது.

முழுக்கமுழுக்க பாராளுமன்றக் கதிரை மீது கொண்ட ஆசை காரணமாக கூட்டமைப்பு எடுத்த தீர்மானத்தால் இன்று நிலைமை மோசமாகி விட்டது.

அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே பேச்சுவார்த்தை ஆரம்பித்த காலப் பகுதியில் சர்வதேசத்தின் போக்கு தமிழ் மக்களுக்கு மிகவும் சாதகமாக இருந்தது.

ஆனால் இப்போது அதன் வலிமை குறைவடைந்து செல்கிறது.

இந்நிலையில், அரசுடனான பேச்சுவார்த்தைக்கு சர்வதேச மத்தியஸ்தம் தேவையென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு கிடைக்கக்கூடிய முடிவு சாதகமாக அமைவது சந்தேகத்திற்குரியதே.

பேச்சுவார்த்தையின் தொடக்கத்தில் இத்தகையதொரு கோரிக்கையை விட்டிருந்தால் அதனை அரசும் சர்வதேச சமூகமும் சாதகமாகப் பரிசீலித்திருக்கும்.

அத்தகைய சூழமைவில் பேச்சுவார்த்தை ஒரு படிமுறையில் நகர்வதற்கான சாத்தியம் இருந்திருக்கும்.

ஆனால், கேட்கவேண்டிய நேரத்தில் கேட்கத் தவறியமைக்கு கூட்டமைப்பின் குறுகிய நோக்கமே காரணம் என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும்.

எனவே, இப்போது கூட சர்வதேச மத்தியஸ்தத்தை கேட்கும் கூட்டமைப்பு அதற்காக காத்திரமான அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டி இருக்கும்.

இதற்கு மேலாக சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவதும் கட்டாயமானதாகும்.

இதனைச் செய்யால் வெறும் வார்த்தை வடிவில் கோரிக்கை இருக்குமாக இருந்தால், பாவம் தமிழ் மக்கள் என்று கூறுவதை தவிர வேறெதுவும் இருக்காது.

# இந்திய அரசினால் கட்டப்படும் வீடுகள் மலையக மக்களுக்கும் வழங்கப்படும்

## கண்டி உதவி இந்தியத் தூதுவர்

இந்திய அரசின் நிதியுதவியுடன் இலங்கையில் அமைக்கப்படவுள்ள வீட்டுத்திட்டத்தில் ஒரு கணிசமான தொகையை மலையக மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கண்டி இந்திய உதவித் தூதுவர் ஏ.நடராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 63ஆவது குடியரசுத் தினம் தொடர்பாக கண்டி ஏர்ள்ஸ் ரீயேஜென்ஸி ஹோட்டலில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கல்வி, அரசியல், பொருளாதாரம், கலாசாரம் போன்ற பல துறைகளிலும் இந்தியா இலங்கைக்கு உதவி வருகிறது. அந்த அடிப்படையில் அண்மைக்காலத்தில் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவரது வருகை மிக முக்கியமான ஒன்று. இலங்கையின் இனப்பிரச்சினை முறுகல் நிலைக்கு மொழி முக்கிய ஒரு காரணியாக உள்ளது.

இந்நிலையில் விஞ்ஞானி அப்துல் கலாம் மும்மொழி அமுலாக்கம் தொடர்பான திட்டவரைபு ஒன்றை ஆரம்பித்து வைத்துச் சென்றார். இது எமது மொழிப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையலாம். அதேபோல் புகையிரதத் துறையிலும் இந்தியா இலங்கைக்கு உதவிவருகிறது. இது பொருளாதார ரீதியில் முக்கியமான ஒன்றாகும்.

அதேபோல் இந்திய அரசு நூற்றுக்கணக்கான இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி வருகின்றது. பின்தங்கிய நிலையில் உள்ள மலையக பகுதிமக்களின் உயர்கல்வி வளர்ச்சிக்கு இது ஒரு காரணமாக அமைகின்றது.

ஒரு சமூகத்தின் உயர்ச்சிக்கு கல்வி முக்கிய ஒரு காரணியாக விளங்குகிறது. அந்த அடிப்படையில் ஆசிரியர் பயிற்சி மற்றும் பௌதீகவள பங்கீடு போன்ற துறைகளில் இந்தியா உதவி வருகின்றது.

எதிர்காலத்திலும் பாடசாலைகளின் அடிப்படைத்தேவைகளை வழங்க இந்தியா திட்டமிட்டுள்ளது. கணனிப்பயிற்சிகள், விளையாட்டு மைதானம், ஆய்வு கூடவசதிகள் போன்றவை ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன. இவ்வாறு அவர் கூறினார். (அ-2)

# வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு முதற்கட்டமாக வீடுகள் கையளிப்பு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

நெடுந்தீவில் இனங்கானப்பட்ட வறுமைக்கோட்டிற்குட்பட்ட 300 குடும்பங்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு இலங்கை கடற்படையினரின் உதவியுடன் முதற்கட்டமாக 20 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி ஆகியோர் அண்மையில் சம்பிரதாய பூர்வமாக கையளித்தனர்.

தலா மூன்று இலட்சம் ரூபா செலவில் புதிதாக கட்டப்பட்ட இவ்வீடுகளில் மலசலகூடம் மற்றும் மின்சாரம் என்பனவும் உள்ளடங்கப்படவுள்ளன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் பிரகாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையின் கீழும் வடமாகாண ஆளுநரின் வழிகாட்டலுடனும் வடமாகாண கடற்படைத் தளபதியின் மேற்பார்வையின் கீழும் அமைக்கப்பட்ட இவ்வீடுகளில் ஒன்றை சம்பிரதாய பூர்வமாக அதன் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டதுடன் புதிய வீட்டையும் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வில் பிரதேச செயலர் சிறி, வடமாகாண கடற்படைத்தளபதி அட்மிரல் ரவி விஜேகுணரட்ன, நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் றெக்சியன், ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

# பாட்டியின் இறுதிச்சடங்கிற்கு செல்ல பேரறிவாளனுக்கு அனுமதி மறுப்பு

பாட்டியின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி வழக்கின் குற்றவாளி பேரறிவாளனுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் வேலூர் மத்திய ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவரது பாட்டி கிருஷ்ணவேணி (வயது 82) .வேலூர் காட்பாட்டி காந்தி நகரில் கடந்த 21 ஆம் திகதி இறந்தார். பாட்டியின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள பேரறிவாளன் சிறைத் துறை அதிகாரிகளிடம் அனுமதி கேட்டார்.

ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலையில் பாட்டியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அனு மதி வழங்கும் படி பேரறிவாளன் மீண் டும் சிறைத்துறை அதிகாரிகளிடம் இன்று அனுமதி கேட்டபோது அதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

இது குறித்து சிறைத்துறை அதிகாரிகள் கூறியதாவது, பேரறிவாளனின் இரத்த உறவு சம்பந்தப்பட்டவர்கள் இறந்தால் மட்டும் தான் பரேலில் செல்ல அனுமதி வழங்கப்படும். அவரது பாட்டி இரத்த உறவு சம்பந்தப்பட்டவர் அல்ல என்பதனால் அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளனர். (அ-2)

## களுத்துறையில் ரவைகள் மீட்பு

களுத்துறை-தெபுவன தெஹிகஹ பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 13ஆயிரத்து 200 ரி 56 துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

களுத்துறைப் பிரதேச குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழு வினால் இந்த ரவைகள் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெபுவன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## டெங்கினால் மாணவன் பலி

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

உக்குவெல, நாகொல்ல பகுதி பாடசாலையொன்றில் தரம் 11 இல் கல்விபயின்ற 16 வயதுடைய மாணவன் ஒருவனே டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கடந்த வருடத்தில் மாத்திரம் 28 ஆயிரத்து 140பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தமை பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

அத்துடன் கடந்த வருடத்தில் டெங்கு காய்ச்சல் காரணமாக 185 பேர் உயிரிழந்துள்ளதாக அமைச்சின் தொற்று நோய் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அனைவருக்கும் தேவை



உண்மை அல்லாதவற்றில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதுடன் உண்மையில் பிடிப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இதைக் கடைப்பிடிப்பவர்கள் வெற்றிபெறுவது உறுதி.

ஒவ்வொரு ஆன்மாவிலும் தெய்வீக சக்தி ஒளிந்து கிடக்கிறது. அதை வெளிக்கொண்டு வருவதே நம் வாழ்க்கையின் இலட்சியம். இதற்காக புறவாழ்க்கையிலும் அகவாழ்க்கையிலும் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டும்.

உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து தப்பி ஓட முயற்சி செய்யாதீர்கள். செய்யும் செயலில் வெற்றியோ, தோல்வியோ கவலைப்பட்டு கொண்டிருக்க கூடாது. தொடர்ந்து பணியைச் செய்ய வேண்டும்.

மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கின்றானோ அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து தான் ஆக வேண்டும்.

கடவுளின் குழந்தைகளாகிய மனிதர்களுக்குத் தொண்டு செய். மனிதர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் ஆண்டவனுக்கு நீ தொண்டு செய்தவனாகிறாய்.

# யாழில் கலாம் சொன்ன ஆலோசனைக்கு தமிழக மீனவர்கள் பெரும் வரவேற்பு

(மண்டபம்)

இந்திய, இலங்கை மீனவர்கள் வாரத்தில் 3 நாட்கள் என முறை வைத்து மீன்பிடிக்கலாம் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்த யோசனையை தமிழக மீனவர்கள் வரவேற்றுள்ளனர்.

ஆழ்கடலில்தான் அதிகம் மீன்கள் கிடைக்கும். இதனால் தமிழக மீனவர்கள் உயிரை பணயம் வைத்து எல்லை தாண்டி சென்று மீன்பிடிக்கின்றார்கள். அதுபோல் இலங்கை மீனவர்களும் வருவதால் மோதல் நடக்கிறது.

இதைத் தவிர்க்க வாரத்தில் 3 நாட்கள் இந்திய மீனவர்களும் அடுத்த 3 நாட்கள் இலங்கை மீனவர்களும் மீன்பிடித்துக் கொள்ளலாம். ஒருநாள் கடலுக்கு செல்லாமல் ஓய்வு எடுக்கலாம் அல்லது அந்த நாளில் இருநாட்டு மீனவர்களும் எல்லை தாண்டி எங்கு வேண்டுமானாலும் மீன்பிடிக்க அனுமதிக்கலாம் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் யோசனை தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையை தமிழக மீனவர்கள் வரவேற்றுள்ளனர். இது குறித்து மீனவ சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கையில்,

இருநாட்டு மீனவர்களும் சகோதரத்துவ முறையில் மீன்பிடித்தால் மீனவர்கள் வாழ்க்கையில் வசந்தம் ஏற்படும். அப்துல் கலாம் கூறிய கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியது. அவர் குடியரசு தலைவராக இருந்தபோதே இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு இருந்தால் இருநாட்டு மீனவர்களும் அமைதியுடன் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு இருப்பார்கள் என்றார். மத்திய மாநில அரசுகள் இலங்கை அரசுடன் பேசி இந்தத் திட்டத்தை உடனே அமுல்படுத்த வேண்டும் என்றார்கள். (அ-2)

## புதுடில்லியில் நிலநடுக்கம்

இந்திய தலைநகர் புதுடில்லியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் மக்கள் பதற்றமான சூழ்நிலையில் காணப்பட்டனர். தலைநகர் புதுடில்லி சோனிபட்–ரோதக் எல்லையை மையமாகக் கொண்டு அதிகாலை ஐந்து மணியளவில் 3.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இப்பகுதிகளில் பல இடங்களில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இதனால் மக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் இருந்து பதற்றமான சூழ்நிலையில் வெளியேறினர். இந்நிலநடுகத்தினால் ஏற்பட்ட சேத நிலவரம் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (அ-2)

# அமைச்சர் தொண்டமானுக்கு திருநள்ளாற்றில் கறுப்புக்கொடி

(காரைக்கால்)

திருநள்ளாறு கோயிலுக்கு சென்ற இலங்கை அமைச்சர் செந்தில் தொண்டமானுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் கறுப்புக் கொடி காட்டியதால் கோயில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

இக்கோயிலில் நேற்று முன்தினம் பல இலட்சம் பக்தர்கள் வந்து ஸ்ரீ சனீஸ்வர பகவானை தரிசனம் செய்தனர். இரவு சுமார் 9 மணியளவில் இலங்கை அமைச்சர் தொண்டமான் தரிசனம் செய்யவந்தார்.

கோயிலுக்குள் சென்று தரிசனம் முடித்துவிட்டு திரும்பும் போது விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் சுமார் 20 பேர் அமைச்சர் வருகையை கண்டித்து இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராக கோஷம் எழுப்பியவாறு கறுப்புக் கொடி காட்டினர்.

பொலிஸார் அவர்களை தடுக்க முயற்சி மேற்கொண்டும் பயனில்லை. இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக ஆவேசமாக அவர்கள் கோஷம் எழுப்பினர். தமிழர்களுக்கு எதிராக நடந்து கொள்ளும் போக்கை கைவிடும்படி ஆவேசமாக பேசினர்.

அதேவேளையில் அமைச்சரை பாதுகாப்புடன் காரில் ஏற்றி அனுப்பி வைக்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர். அமைச்சருக்கு கறுப்புக் கொடி காட்டிய பிரச்சினையால் திருநள்ளாறு கோயில் பகுதியில் திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

(அ-2)

# மறுவாழ்வு மைய விடுதியில் தீ விபத்து 34 பேர் உயிரிழப்பு

## பெருவில் நேற்று பரிதாபம்



பெரு நாட்டின் தலைநகர் லிமாவில் மறுவாழ்வு விடுதி உள்ளது. இங்கு போதைக்கு அடிமையானவர்கள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் ஆகியோர் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். அவர்கள் வெளியில் தப் பிச் செல்ல முடியாமல் அங்கேயே சிறைக்கைதிகள்போல் அடைக்கப் பட்டு இருந்தனர்.

இங்கு நேற்று அதிகாலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. கட்டடத்தின் நாலாபுறமும் தீ சுற்றி வளைத்து எரிந்தது. அங்கு இருந்தவர்கள் அடைக்கப்பட்டு இருந்ததால் தப்பிக்க முடியாமல் சிக்கிக் கொண்டனர்.

இதில் 34 பேர் தீயில் கருகி உயிர் இழந்தனர். உடனே தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று கடுமையாக போராடி தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். பல மணிநேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். உள்ளே சிக்கி இருந்த பலரை தீக் காயங்களுடன் மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த தீ விபத்தில் தீயணைப்பு வீரர்கள் 10 பேர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (அ-2)

# போதைப் பொருள் கடத்தியவருக்கு முதன் முறையாக மரணதண்டனை

## பஞ்சாப் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

போதைபொருள் கடத்திய வழக்கில் முதல் முறையாக மரண தண்டனை விதித்து பஞ்சாப் மாநில சிறப்பு நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த பரத்ஜித் சிங் என்பவர் போதை பொருள் கடத்தியதாக கடந்த 2005 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகளுக்கு பின் பரோலில் வந்த பரத்ஜிங் சிங் மீண்டும் போதைப்பொருள் கடத்தியதால் 2007 இல் கைது செய்யப்பட்டார்.

அவர் மீது தொடரப்பட்ட வழக்கு சண்டிகர் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அந்த வழக்கில் நீதிபதி ஷாலினி சிங் தீர்ப்பு வழங்கினார். போதைப்பொருள் கடத்திய பரத்ஜித் சிங்குக்கு மரணதண்டனை விதித்து உத்தரவிட்டார்.

வழக்கமாக போதைப் பொருள் கடத்திய வருக்கு கடுங்காவல் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். ஆனால் போதைப் பொருள் கடத்தியவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும். (அ-2)




# தமிழர்களின் பண்பாட்டை பாதுகாக்க நாம் தமிழர் கட்சி தொடர்ந்து போராடும்

## சீமான் தெரிவிப்பு



(முள்ளக்காடு)

தமிழ் மொழி சிதைக்கப்பட்டு வருகிறது. தமிழினத்தின் முகவரிகள் அழிக்கப்பட்டு வருகிறது. தமிழ் தேசிய வரலாறு கலைகளான நாடகம், ஒயிலாட்டம், கோலாட்டம், கும்மியாட்டம் போன்றவைகளும் சிலம்பம், கபடி போன்ற வீர விளையாட்டுக்களும் சிதைக்கப்பட்டு வருகின்றது என சீமான் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்ட நாம் தமிழர் கட்சி இளைஞர் பாசறை சார்பில் பாரதி நகரில் கோலப்போட்டி, சிலம்பாட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நாம் தமிழர் கட்சி முதன்மை ஒருங்கிணைப்பாளர் சீமான் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ,

முரடர்களின் விளையாட்டு என்றும் படித்தவர்கள் விளையாடக்கூடாது என்றும் கூறி தமிழர்களின் கலாசாரத்தை இந்த மண்ணில் சிதைத்து அழிக்கும் முயற்சிகள் நடந்து வருகிறது.

இந்த போட்டியில் அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளில் முனைப்பாக விளையாடி வருகிறது. தமிழனின் சிலம்பாட்டத்தில் உள்ள தடி–அடி குத்து வரிசையை அடிப்படையாக வைத்து கராத்தே குங்ஃபூ போன்ற விளையாட்டை ஜப்பானியர்கள் விளையாடி வருகின்றனர். அதை அவர்களுக்கு சொல்லிக் கொடுத்ததே நாம் தான்.

இது போன்ற நிலையில் இந்த மண்ணில் தமிழர்களை ஒன்றுபடுத்த தன் உயிரை கொடுத்து உடம்பில் நெருப்பை கொட்டி வெந்த முத்துக்குமார் நினைவுடன் தமிழ் தேசிய இனத்தின் அடையாளங்களை பாதுகாப்போம் என்றார். (அ-2)



சென்னையில் முதல்வர் ஜெயலலிதாவை நேற்று முன்தினம் நடிகர் ரஜினிகாந்த் சந்தித்து மலர் கொத்தும் தானே புயல் நிவாரண நிதியாக 10 இலட்சம் ரூபாயும் வ்ழங்கியதைப் படத்தில் காணலாம்.

# ஒரே நாளில் இரண்டுமுறை சுருண்டது சிம்பாவே



சிம்பாவே அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 301 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

நியூசிலாந்தின் நேப்பியர் நகரில் நடைபெற்ற இப் போட்டியில் சிம்பாவே அணி நேற்று முன்தினம் சனிக்கிழமை தனது இரு இன்னிங்ஸ்களிலும் சகல விக்கெட்டுக்களையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

சிம்பாவே அணி டெஸ்ட் போட்டிகளில் தழுவிய மிகப்பெரிய தோல்வி இதுவாகும். அதேவேளை டெஸ்ட் போட்டிகளில் நியூஸிலாந்து அணியின் மிகப்பெரிய வெற்றியும் இதுவாகும்.

ஒரேஒரு டெஸ்ட் போட்டி மாத்திரம் கொண்ட இத்தொடரின் வெற்றியையும் நியூசிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த நியூசிலாந்து அணி 2ஆவது நாளில் 5 விக்கெட் இழப்புக்கு 392 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மூன்றாவது நாளான நேற்று முன்தினம் 7 விக்கெட் இழப்புக்கு 495 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் துடுப்பாட்டத்தை நிறுத்திக் கொண்டது.

ரோஸ் ரெய்லர் 122 ஓட்டங்களையும் பி.ஜே.வட்லிங் 108 ஓட்டங்களையும் பெற்றனர்.

அதையடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த சிம்பாவே அணி 28.5 ஓவர்களில் 51 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மல்கம் வெல்லர் 23 ஓட்டங்களைப் பெற்றார். வேறொவரும் 10 ஓட்டங்களைக் கூட பெறவில்லை.

டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் சிம்பாவே அணிபெற்ற மிகக்குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

2005ஆம் ஆண்டு அவ் அணி தென்னாபிரிக்காவுக்கு எதிராக 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தது.

நியூசிலாந்து பந்துவீச்சாளர்களின் கிறிஸ் மார்ட்டின் 5 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ரிம் சௌதி 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் பிரஸ்வெல் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ட்ரென்ட் பௌட் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். டானியல் விக்டோரி 2 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

பொலோன் நிலைக்குத் தள்ளப்பட்ட சிம்பாவே அணி 2ஆவது இன்னிங்ஸையும் ஆரம்பித்தது. அன்றைய ஆட்டநேரம் முடிபதற்குள் அவ் அணி 143 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிலும் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ரெஜிஸ் சகாப்வா மாத்திரம் அரைச்சதம் (63) பெற்றார். கிறேம் கிறெமர் 26 ஓட்டங்களைப் பெற்றார். நியூசிலாந்து பந்துவீச்சாளர்களில், கிறிஸ் மார்ட்டின் 26 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

டக் பிறாஸ்வெல் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். கேன் வில்லியம்ஸன் 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

டெஸ்ட் போட்டிகளில் ஓர் அணி ஒரே நாளில் இரு இன்னிங்ஸ்களிலும் ஆட்டமிழப்பது இது மூன்றாவது தடவையாகும் ஏற்கனவே சிம்பாவேயும் இந்தியாவும் இந் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

நேபியர் டெஸ்ட் போட்டியின் சிறப்பாட்டகாரராக கிறிஸ்மார்ட்டின் தெரிவானார். நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள சிம்பாவே அணி ஒரேஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ளது. அடுத்து மூன்று ஒரு நாள் சர்வதேச போட்டி மற்றும் இரண்டு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரிலும் பங்கேற்கவுள்ளது.

முதல் ஒருநாள்சர்வதேசபோட்டி எதிர் வரும் 3ஆம் திகதியும் 6ஆம், 9ஆம் திகதிகளில் முறையே அடுத்தடுத்த போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இரண்டு இருபது-20 போட்டிகள் எதிர் வரும் 11, 14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

# ஒட்டுமொத்தமாக மாற்றுங்கள் முன்னாள் வீரர்கள் ஆவேசம்



ஸ்ரீகாந்த்

அந்நிய மண்ணில் அடுத்தடுத்து 8 மோசமான தோல்விகளைப் பெற்ற இந்திய அணியை, ஒட்டுமொத்தமாக மாற்ற வேண்டும் என முன்னாள் வீரர்கள் ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் தொடர்ச்சியான தோல்விக்கான காரணங்கள் குறித்து இந்தியாவின் முன்னாள் வீரர்கள் தெரிவித்த கருத்துக்கள் இதோ,

**முன்னாள் அணித்தலைவர் பிஷன் சிங் பேடி**

ஆஸி., வீரர்களின் பயிற்சி முறைகளை ஒப்பிடும் போது, நாம் பின் தங்கி உள்ளோம். நமது களத்தடுப்பு மோசம். சில எளிய பிடிகளை கூட கோட்டை விட்டனர்.

**முன்னாள் அணித்தலைவர் அஜீத் வடேகர்**

மூத்தவீரர்கள் முதற்தரப் போட்டிகளில் பங்கேற்காதது மோசமான செயல். இதில் கட்டாயம் விளையாட வேண்டும். சச்சின், ராவிட், லக்ஷ்மன், சேவாக் போன்றவர்கள் இதை செய்வதுகிடையாது இதனால்தான் உலகத் தரம்வாய்ந்த வீரர்கள் இருந்தும் மோசமாக தோக்கிறோம். நமது அணி மூத்தவீரர்களை அதிகம் நம்பியுள்ளது.

ரகானே, ரோகித் போன்றவர்களுக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை. அதிகபடியான கிரிக்கெட் காரணமாகவும், சரியான திட்டமிடல் இல்லாமல் போகிறது. அணியை ஒட்டுமொத்தமாக மாற்ற உறுதியான முடிபெடுக்க நேரம் வந்துவிட்டது.

**தேர்வுக்குழு தலைவர் : ஸ்ரீகாந்த்**

மூத்தவீரர்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தேன் முதல் 5 வீரர்களும் ஒட்டுமொத்தமாக இத் தொடரில் ஏமாற்றினர். ரகானே ரோகித் சர்மா ஒரு டெஸ்டில் கூட பங்கேற்காமல் நாடு திரும்புகின்றனர்.

**தேர்வுக்குழு முன்னாள் தலைவர் : வெங்சர்க்கார்**

இந்திய அணியின் அட்டவணையே தவறாகவுள்ளது. ரோகித்சர்மாவை எந்தப் போட்டியிலும் பங்கேற்கவைக்காமல் 5 வாரம் உட்கார வைத்துள்ளனர்.

சிலதோல்விகள் கிடைத்தபின், இந்தியக் கிரிக்கெட்சபை (பி.சி.சி.ஐ.) முன்னாள் வீரர்களுடன் ஆலோசித்திருக்க வேண்டும்.

**முன்னாள் விக்கெட்காப்பாளர் சையது கிர்மானி**

இந்தியக் கிரிக்கெட் வரலாற்றில் எப் போதும் இல்லாத தோல்வி இது. அனுபவ வீரர்கள் இருந்தும் இது போல நடப்பது துரதிர்ஷ்ட வசமானது. போதிய முயற்சி இல்லாமல், வெற்றி பெறுவோம் என்ற எண்ணம் இன்றி மோசமாக விளையாடினார்.


இதற்குப் பயிற்சியாளர் பிளட்சரும் பொறுப்பு 0:8 என்ற கணக்கில் அந்நிய மண்ணில் தோல்வியடைந்துள்ள நிலையில், பயிற்சியாளர் குறித்து யாரும் பேசாதது வியப்பு.

**பாடம் கற்கவில்லை**

முன்னாள் வீரர் சந்து போர்டே கூறுகையில், இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் செய்த தவறேயே திரும்பத் திரும்ப செய்தனர்.

நமது வீரர்களின் பலம், பலவீனங்களை நன்கு அறிந்த அவுஸ்திரேலிய வீரர்கள், அதற்கேற்ப விளையாடி சாதித்தனர் என்றார்.





மு/விசுவமடு மகா வித்தியாலயத்தில் கடந்தவாரம் நடைபெற்ற பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம, சிறப்பு விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் ஒலிம்பிக் தீபத்தினை விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஏற்றி வைப்பதையும் படங்களில் காணலாம்.

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்

# ஜோகோவிச் மீண்டும் சம்பியன்; ரூ. 26 கோடி பணப்பரிசை வென்றார்

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ்தொடரில் சேர்பிய வீரர் நோவாக் ஜோகோவிச் சம்பியன் ஆகியுள்ளார்.

மெல்பேர்ன் நகரில் நேற்று இரவு நிறைவடைந்த இறுதிப்போட்டியில் இரண்டாம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடாலை நடப்புச் சம்பியனும் உலகின் முதல் நிலை வீரருமான நோவாக் ஜோகோவிச் 5:7, 6:4, 6:2, 5:7, 6:5 என்ற விகிதத்தில் தோற்கடித்தார்.

மிகமிக கடுமையாக நடைபெற்ற இப்போட்டி சுமார் 6 மணித்தியாலங்கள் நீடித்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் சம்பியனாகிய ஜோகோவிச் 2,367,850 அமெரிக்க டொலர் (சுமார் 26 கோடியே 92 இலட்சம் இலங்கை ரூபாய்) பணப்பரிசையும் வென்றுள்ளார்.

இரண்டாம் இடம்பெற்ற நடால் 1,183,926 டொலர்களை (சுமார் 13 கோடியே 46 லட்சம் ரூபாய்) வென்றுள்ளார்.

அவுஸ்திரேலிய பகிரங்கச் சுற்றுப்போட்டியில் ஜோகோவிச் 3 ஆவது தடவையாக சம்பியனாகியுள்ளார். அவர் வென்ற 5 ஆவது கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் ஒற்றையர் பட்டம் இதுவாகும்.

24 வயதான நோவாக் ஜோகோவிச் 2008ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பகிரங்கத் தொடரில் சம்பியனானதன் மூலம் தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார்.

கடந்த வருடம் அவுஸ்திரேலிய பகிரங்கத் தொடர், விம்பிள்டன் மற்றும் அமெரிக்கப் பகிரங்கத் தொடர்களில் சம்பியனாகியிருந்தார்.

# ஆடவர் இரட்டையர் பயஸ் ஜோடி சம்பியன்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் லியண்டர் பயஸ்-ராடேக் ஸ்டெபனக் இணை சம்பியன் பட்டம் வென்றது.

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிகள் மெல்பேர்னில் நடைபெறுகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆடவர் இரட்டையர் இறுதிப்போட்டியில் முதலாம் தரவரிசையிலுள்ள அமெரிக்காவின் பாப் பிரயன் - மைக் பிரயன் இணையை, தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வென்றது.

# பெண்கள் ஒற்றையர் விக்டோரியா அஸரென்கா சம்பியன்

அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டியில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்கா சம்பியன் பட்டம் வென்றார்.

அவுஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒன்றையர் இறுதிப் போட்டியில் மூன்றாம் தரவரிசை வீராங்கனையான விக்டோரியா அஸரென்கா, ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை எதிர்கொண்டார்.

விக்டோரியா அஸரென்கா, 4ஆம் தரவரிசையின் வீராங்கனையான ஷரபோவாவை 6:3, 6:0 என்ற நேர்செட்களில் மிக எளிதாக வென்று சம்பியன் பட்டத்தைச் தட்டிச்சென்றுள்ளார்.

விக்டோரியா பெற்றுள்ள முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத மின்பெற்ற 52 பேர் கைதாகினர்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 52 பேர் நேற்றும் நேற்று முன்தினமும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து முப்பது வாகனங்களில் வந்த இலங்கை மின்சாரசபை ஊழியர்களும் நெல்லியடிப் பொலிசாரும் நேற்றும் நேற்று முன்தினமும் அதிகாலை சட்டவிரோத முறையில் மின்சாரம் பெற்ற 52 பேரை கைது செய்தனர்.

இவர்கள் அனைவரும் எதிர் வரும் 3-ம் திகதி பருத்துத்துறை நீதி மன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். அனைவரிடமிருந்தும் சட்டவிரோதமாக மின் பாவனைக்கு பயன்படும் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. (எ-11-24)

## ஐ.தே.கவுக்குள்...

முதலாவதாக வாக்குச்சீட்டுக்களில் இலக்கங்கள் போடப்பட்டன. இரண்டாவதாக இந்தத் தேர்தல் கட்சி தலைமையக மான சிறிகொத்தாவிலுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் அறையில் நடத்தப்பட்டது.

இதனைவிட கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பக்கச் சார்பாக நடந்து கொண்டார் என கருதுவதற்கு நியாயமான காரணங்களும் உள்ளன என அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் இருப்பவர்களைத் தவிர ஏனையவர்களை கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவுக்குள் அனுமதிப்பதில்லையென உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும், டசின் கணக்கில் வெளியாட்களை ரணில் விக்கிரமசிங்க உள்ளே வருவதற்கு அனுமதித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பு கடந்த வருடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் அதனை மீறும் வகையில் ரணில் விக்கிரமசிங்க இரு தடவைகள் செயற்பட்டிருக்கின்றார்.

முதலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளராக ரவி கருணாநாயக்கவை அவர் நியமித்தார். இரண்டாவதாக கட்சித் தேர்தல் நடைபெற்றபோது ரகசியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை அவர் மீறிச் செயற்பட்டார் எனவும் மைத்திரி குணரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## 1600 கைதிகள் விடுதலை...

சிறைகளில் உள்ள னர்.

இவ்வாறு சிறு குற்றச்சாட்டுக் கள் சுமத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டவர்களின் தண்டப் பணத்தை அரசாங்கம் பொறுப்பேற்பதோடு அவர்களை விடுதலை செய்யவும் தீர்மானித்துள்ளது.

உலகத்தில் எந்த நாடும் இவ்வாறு செய்ததில்லை. அத்தோடும் இலங்கையிலும் முதன் முறையாக இது நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ம் திகதி சுதந்திர தினத்தன்று ஆயிரத்து 600 கைதிகளை விடுதலை செய்யவுள்ளோம்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்பு எமது நாடு மிகவும் வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றது.

அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் இடம்பெறு கின்றது.

கடந்த வருடத்தில் 51.9 பில்லியன் ரூபா நிதி வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் போராளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு 200 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் ஒரு இனம் இன்னொரு இனத்திற்கு அடிமையில்லை எல்லோருக்கும் சம உரிமையுண்டு.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த ஒற்றுமையையும் சமாதானத்தையும் பிளவுபடுத்த சில சக்திகள் செயற்பட்டு வருகின்றன அவற்றுக்கு இடமளித்து எமது சமாதானத்தை நாம் இழந்து விடக்கூடாது.

கடந்த வருடம் யாழ்ப்பாணம் வருகை தந்தபோது முன்னாள் போராளிகளைப் பாராளுமன்றத்திற்கு அழைத்துச் சென்று அமைச்சர்களுடன் உரையாடவிட்டது தொடர்பாக கூறியிருந்தேன்.

அதற்கு இங்குள்ள அரசியல் வாதிகள் பலவிதமாக விமர்சனம் செய்தனர். இவ்வாறு விமர்சனம் செய்வதனால் நாம் ஒருபோதும் பின் நிற்கப் போவதில்லை. யார் என்ன சொன்னாலும் அபிவிருத்திப் பணிகளையும் இவ்வாறான நலத் திட்டங்களையும் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## கடத்தப்பட்ட...

யட்சகர் அநுர பிரேமசந்த விசாரணைகளை மேற்கொண்டார்.

இதன்போது காணாமல்போனதாக கூறப்பட்ட சத்தியசீலன் பாக்கியராஜ் அவரின் கையடக்க தொலைபேசியின் உதவியுடனேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளிடம் காணாமல்போனது போன்று நடித்த பின்னர் அச்சுவேலி பிரதேச பெண்ணொருவரை திருமணம் செய்ய அவர் தயாராகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

சத்தியசீலன் பாக்கியராஜ் திருமணம் செய்யவிருந்த பெண்மணியின் தாயாரே இது தொடர்பான வாக்குமூலத்தை அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உபாலி பி.நவரம்பாவனவின் அறிவித்தலுக்கிணங்க பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.எம்.நந்தல மற்றும் ஐ.சுரேஸ்குமார் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## சிப்பாய்...

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டபோரின்போது படைத்தரப்பினரிடம் சரணடைந்த சர்மிளா புனர்வாழ்வு பெற்ற பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அத்துடன்,இவரைத் திருமணம் செய்த சந்துருவன் கிளிநொச்சியில் நிலை கொண் டுள்ள 25வது கஜபா படைப் பிரிவில் பணியாற்றி வருகின்றார்.

இந்நிலையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாகவே இந்தத் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (எ-11)

## ஒபாமாவின் தூதுவ...

உள்நோக்கத்துடனானதாக இருக்கலாம் என கொழும்பு கருதுவதாகவும் தெரிகின்றது.

இதன் அடிப்படையில் அவரது விஜயத்தின்போது பேசப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பிலான தயாரிப்புக்களை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குழு மேற்கொண்டு வருகின்றது.

ஸ்ரீபன் ரப் எதிர்வரும் 5-ம் திகதி திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்வார் என கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஆயினும் அவரது விஜயம் தொடர்பிலான நிகழ்ச்சிநிரல் இப்போதுதான் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட முக்கிய அரசாங்கத் தலைவர்களையும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மற்றும் குடியியல் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலரையும் ஸ்ரீபன் ரப் சந்திப்பார் எனத் தெரிவிக்கப் பட்டுள்ள போதிலும், வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் இச் செய்தியை இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

அத்துடன் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக இவர் முக்கிய கவனத்தைச் செலுத்துவார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, ஸ்ரீபன் ரப்பின் இந்த விஜயத்தை எவ்வாறு அணுகுவது மற்றும் அவரின் இந்த விஜயத்தின்போது எழுப்பப்படும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது தொடர்பில் தமது உபாயங்களை வகுத்துக் கொள்வது குறித்து அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்க ஜனாதிபதியின் போர்க் குற்ற விவகாரங்களுக்கான தூதுவராகப் பணியாற்றும் ஸ்ரீபன் ரப், 2007 ஆம் ஆண்டு ஜனவரியில் சியராலியோனுக்கான விசேட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுநராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சியராலியோனில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் பெருமளவு கொடூரங்களுக்குப் பொறுப்பானவர்கள் என லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதி சார்ள்ஸ் ரெயிலர் மற்றும் ஏனையவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்கு இவரே பொறுப்பாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


**மின் உபகரணங்கள் பழுது பார்த்தல்**

Washing Machine (Full Auto, Semi Auto), T.V, Radio, Hi Fi Set up, Fan, Rice Cooker, Blender, Fridge மற்றும் வீட்டு மின் உபகரணங்கள் அனைத்தும் உங்கள் வீட்டுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டு வயரிங் திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 0778000748 (7390)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**உயர்திரு. அ. ஈஸ்வரநாதன்**



எமது கல்லூரியின் அதிபராக இருந்து இன்று உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்கும் உயர் திரு. அ. ஈஸ்வரநாதன் அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி
(C-5742)

**பதவி வெற்றிடம்**

- ஒவ்செற் இயந்திர இயக்குநர்
- ஒவ்செற் இயந்திர பயிலுநர்கள்
- பத்திரிகை மடிப்பவர்கள்

தகைமையும் விருப்பமும் உடைய ஆண்கள் நேரில் வரவும்

மனித வள முகாமையாளர்

**வலம்புரி**

இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**27ம் ஆண்டில் கலாலயா பயிற்சியகம்**

பெருமாள் கோயிலுக்கு அண்மையில்
யாழ்ப்பாணம்



கடந்த எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கா னோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**இதோ மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
- கைவேலை
- Sareé Work
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (Hair Dressing & Styling)
- பூவேலை
- பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- தையல் அறிவு அற்றவர்களுக்கான தையல் (உடை தயாரித்தல்) பயிற்சிகள்.
- Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகள்.

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

❄ தையல் தெரிந்தவர்களுக்கான 10 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகள்

**ஆரம்பம்: 06.02.2012 திங்கட்கிழமை காலை 9.00 மணி.**


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.